# இ. தி. மு. க. மகாநாடு செய்தி பற்றி யாழ்ப்பாண நிருபர்கள் விசாரணை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 250
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 4 ஷஃபான் 8 திங்கட்கிழமை [20-10-69]

தீபாவளி வாழ்த்து!

கட்டழகு கவிநடை!
கண்கவரும் சித்திரம்!
அத்தனையும் எங்கள் வாழ்த்து!
தீபாவளி வாழ்த்துக்கள்
விற்பனையாகிறது
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கிடைக்கும்
தயாரிப்பு:
தமிழ்ப்பண்ணை
புத்தகநிலையம்
193. கே. கே. எஸ். ரோடு.
19, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

தீபாவளி
மலிவு விற்பனை
மகத்தான ஆரம்பம்
19 — 10 — 1969

உங்கள் பண்டிகைக் கேற்ற ஜவுளித் தினுசுகளையும் சேலைவகைகளையும் மிகவும் மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்.

சாறி எம்போறியம்
124, கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 1449

## கொழும்பிலிருந்து இரகசிய பொலிஸார் வந்தனர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழக மகாநாட்டில் ''இலங்கையில் கொரில்லா யுத்தம்'' நடத்தவேண்டுமென்று பேசியதாக வெளிவந்த செய்தி சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் உள்ள சில பத்திரிகை நிருபர்கள் இரகசியப் பொலிஸாரால் நேற்று விசாரணைசெய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இரகசியப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

## 'ஆங்கிலத்தைப்புறக்கணிக்காதீர்'

உடவளவ, ஞாயிறு

நாட்டின் அரசாங்கமொழி சிங்களமாக இருந்தாலும் ஆங்கில மொழியைப் புறக்கணிக்கக்கூடாது ஆங்கிலம் சர்வதேசமொழி அது அத்தியாவசியமானது எனவே அம் மொழியைப் புறக்கணிக்கக்கூடாது

எம்பிலிபிட்டியா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய அப்பகுதி காரியாதிகாரி திரு எஸ் டபிள்யூ சூரியாராச்சி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் முன்னேறிவரும் நாடுகளோடு தொடர்புகொண்டு இலங்கை சகலதுறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமானால் அதற்கு ஆங்கிலம் அவசியம் எனக் குறிப்பிட்டார் இப் பகுதி கல்வி அதிகாரி திரு எல் பி குணபாலா, மகாவித்தியாலய உபஅதிபர் மற்றும் பலரும் உரையாற்றினர்

# யாழ். சுங்க காரியாலய கொள்ளை சம்பந்தமாக இருவர் களனியில் கைது

## துப்பாக்கிகளும்சிலபொருட்களும் கைப்பற்றப்பட்டன

### மேலும் இருவர்மீது பொலிஸார் வலை வீச்சு

--நமது கொழும்பு நிருபர் பெரி சுந்தரலிங்கம்--

கொழும்பு, திங்கள்

**யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற சுங்கக் காரியாலயக் கொள்ளை சம்பந்தமாகக் களனியில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

ரஞ்சித் சரத்பெரேரா, ஜே. ஏ. தர்மதாசா ஆகிய இருவருமே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் களனியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டபோது இவர்களிடம் கைத்துப்பாக்கிகளும், களவு போனதாகக் கருதப்படும் சில விலை உயர்ந்த பொருட்களும் மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் ... நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் திரு ... இவர்களைக் கைதுசெய்தார்.

இக்களவு சம்பந்தமாக மேலும் இருவர் பொலிஸாரால் தேடப்பட்டுவருகின்றனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் இன்று யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப் படவிருக்கின்றனர்.

இ தி மு க செயலாளர் திரு. இளஞ்செழியன் மகாநாட்டில் பேசுகையில் தமி... ...மை பெறுவதற்கு ...கொரில்லா யுத்தம் நடாத்த வேண்டுமென சில ஆங்கில பத்திரிகைகளிலும், சிங்... ரணை நடாத்தி இ தி மு க வை தடைசெய்ய வேண்டுமென சில 'சிங்கள பிரமுகர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தியிருந்தனர்.

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் திரு பசநாயக்கா, திரு ஆ. ஜி சேனநாயக்கா, மகாநாயக்க தேரோக்கள் உட்படப் சிலர் இதுபற்றி விசாரணை நடாத்தும்படி பிரதமரிடம் வற்புறுத்தியிருந்தது தெரிந்ததே.

இ தி மு க தலைவர்கள் ...

## வடக்கில் 'அண்ணா' நகர் உதயமாகும்

### ஜனசங் கட்சி ஏற்பாடு

புதுடில்லி, அக் 19

புதுடில்லியில் மறைந்த 'தமிழ்நாடு' முதலமைச்சர் திரு. சி.என். அண்ணாதுரையின் பெயரால் 'அண்ணா நகர்' அமைக்கப்படவிருக்கின்றது. இதை ஜனசங் கட்சியைச் சேர்ந்த எம்.பி. ஒருவர் அறிவித்திருக்கிறார்.

புதுடில்லியில்நடைபெற்ற அண்ணா பிறந்தநாள் விழாவில் பேசிய திரு. சோந்தி என்ற அந்த எம்.பி.பின்வருமாறு கூறினார்.

அண்ணாவுடன் நெருங்கிப் பழகிய காரணத்தால் நீங்கள் அவர்மீது உணர்ச்சி பூர்வமான மதிப்பு வைத்து இருக்கிறீர்கள்.

அவரது நல்ல பண்புகளும், அவரது திறமையும் தூரத்தில் இருந்து பார்த்த எங்களுக்குத்தான் அதிகமாக தெரிந்தது. ... ணைக்கு எங்களுக்கு அரசாங்கமும் சம்மதம் கொடுத்து விட்டது.

சோந்தி 'அண்ணாநகர்' அமைப்பதாகக் கூறியபோது கூடியிருந்த மக்கள்கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

இந்தவிழாவில் மத்திய மந்திரி டாக்டர் சந்திரசேகர் கலந்துகொண்டு பேசினார்.

அண்ணா ஒரு மிகச்சிறந்த தலைவர்; சீர்திருத்தக் கருத்துக்களில் நான் அவருடன் இணைந்து பணியாற்ற முனைந்து இருந்தேன் என்று கூறினார்.

## தீபாவளிக்கு விசேட ரயில் சேவை நடத்துக

வெள்ளவத்தை, ஞாயிறு

வடபகுதி

## கூட்டுறவு மின்தறி உற்பத்தி நிலையம் விற்பனைஇன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானை வலி மேற்கு பலநோக்குக் கூட்டுறவு சமாசங்களின் சங்கம் இன்று தனது மின்தறியினால் உற்பத்தி செய்யப்படும் ஜவுளி விற்பனையை ஆரம்பிக்கிறது வடமாகாணத்தில்கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கும் முதலாவது விற்பனையும் இதுவேயாகும் தற்போது இருநேர உற்பத்தி நடைபெற்று வருகிறது. விரைவில்மூன்றுநேர உற்பத்தி ஆரம்பமானதும் சுமார் 200பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது 16 நிர்வாகசபை உறுப்பினர்களுடன் இயங்கிவரும் இந்த சமாசத்தின் பொறுப்பை திரு வை ராஜசுந்தரம் சென்ற ஆண்டில் பொறுப்பேற்றார்.

பருத்தித்துறை நகை முதலாளி கொலை:

## றிவால்வர், கிறீஸ் மீட்கப்பட்டன

### ரகசியபொலிஸ்விசாரணைதொடர்கிறது

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை நகைக் கடை முதலாளி 'கொலை' சம்பந்தமாக ரகஸியபொலிஸார் மேலும் பல தகவல்களைச் சேகரித்துள்ளதோடு பல பயங்கர ஆயுதங்களையும் மீட்டுள்ளனராம். கைதாகி ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் ராமச்சந்திரன் பாவித்த தாகக் கூறப்படும் கிறிஸ் போன்ற பல ஆயுதங்களையும், 'றிவால்வர்' ஒன்றையும்பொலிஸார் மீட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் நடைபெற்ற கத்திக்குத்து வழக்கொன்றும் இவ்விசாரணைக்குப் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன,

முதலில் கைதான ராமச்சந்திரன் பாவித்த தாகக் கூறப்படும் மோட்டார்சைக்கிள் வண்டி யாழ்ப்பாணத்தில் தற்போது கடமையாற்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது

பின்னர் கைதான மூன்று வாலிபர்களையும் துருவித்துருவி ஆராய்ந்த விசேஷரகசியப்பொலிஸ் கோஷ்டியினர் மேல் விசாரணையை மேற்கொள்ள அககரைப்பற்று, கண்டி ஆகிய இடங்களுககுச் சென்றுள்ளனர். (கா நி)

## ஜாதிக சம்பத முடிவுகள்

கொழும்பு, திங்கள்

நேற்று இரத்தினபுரியில் வைத்து அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 8ம் இலக்க ஜாதிக சம்பத சுவீப் முடிவுகள் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு கூறினார்.

அண்ணாவுடன் நெருங்கிப் பழகிய காரணத்தால் நீங்கள் அவர்மீது உணர்ச்சி பூர்வமான மதிப்பு வைத்து இருக்கிறீர்கள்.

அவரது நல்ல பண்புகளும், அவரது திறமையும் தூரத்தில் இருந்து பார்த்த எங்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும்.

அண்ணா அவர்கள் இந்தியாவுக்குத்தான் அண்ணாவாக இருந்தார். ஆனால் அவர் தென்னாட்டுக்காந்தி.

அண்ணாவின் பெயரால் டெல்லியில் ஒரு நகரை ஏற்படுத்த எண்ணியிருக்கிறோம் டில்லியில் சப்தர் ஜங் விமான நிலையம் இருக்கும் இடம் ஜனசங்கத்தின் ஆட்சியில் இருக்கிறது

அதன் அருகே புதிய குடியிருப்பு ஏற்படும் போது அதற்கு அண்ணா நகர் என்று பெயர்வைக்க முடிவுசெய்து இருக்கிறோம். இந்தயோச

ந்து இருந்தேன் என்று கூறினார்.

‘தீபாவளிக்கு

## விசேட ரயில் சேவை நடத்துக’

வெள்ளவத்தை, ஞாயிறு

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி விசேட புகையிரத சேவைகளை நடாத்தும்படி வடமராட்சி பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. த சுந்தரலிங்கம் புகையிரத ஜெனரல் மனேஜர் திரு பி டி ரம்பாலாவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

கொடிகாமத்திற்கும்பருத்தித்துறைக்குமிடையில் விசேட பஸ் சேவை விடும்படியும் இவர் பருத்தித்துறை இ போ ச டிப்போ மனேஜருக்கு எழுதியுள்ளார்.

சுமார் 200பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது 16 நிர்வாகசபை உறுப்பினர்களுடன் இயங்கிவரும் இந்த சமாசத்தின் பொறுப்பை திரு வை ராஜசுந்தரம் சென்ற ஆண்டில் பொறுப் பேற்றார்.

## ஜெயவீரா புதிய அங்கத்தவர்

ரோம், அக் 19

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன டைரக்டர் திரு. நெவில் ஜெயவீரா சர்வதேச ஒலிபரப்பு நிலைய (ஐ பி ஐ) அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டுள்ளார். ஆறு புதிய அங்கத்தவர்களில் இவரும் ஒருவராகச் சேர்க்கப்பட்டார்.

போது இவர்களிடம் கைத் துப்பாக்கிகளும், களவு போனதாகக் கருதப்படும் சில விலை உயர்ந்த பொருட்களும் மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் திரு தாமோதரம் களனிப் பொலிஸ்நிலைய உத்தியோகத்தர்களின் உதவியுடன்

பட்டிருக்கின்றனர்.

இ தி மு க செயலாளர் திரு. இளஞ்செழியன் மகாநாட்டில் பேசுகையில் தமிழர் உரிமை பெறுவதற்கு கொரில்லா யுத்தம் நடாத்த வேண்டுமென சில ஆங்கில பத்திரிகைகளிலும், சிங்கள பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்த செய்தி சம்பந்தமாக உடனடி விசா

திரு ஆ. ஜி. சேனநாயக்கா, மகாநாயக்க தேரோக்கள் உட்படப் சிலர் இதுபற்றி விசாரணை நடாத்தும்படி பிரதமரிடம் வற்புறுத்தியிருந்தது தெரிந்ததே.

இ தி மு க தலைவர்கள் ஏற்கனவே இதுசம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டனர்,

# சீன-சோவியத் பேச்சுக்கள் இன்று பீகிங்கில் ஆரம்பம்

ஹாங்காங், அக். 19

சோவியத்யூனியனுக்கும் சீன அரசுக்குமிடையான எல்லைத்தகராறுகள் பற்றிய பேச்சுக்கள் நாளை ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக சோவியத் துணைப்பிரதமமந்திரி திரு. குட்னஸ்சோவ் பீகிங் புறப்பட்டுச் சென்றுள்ளார்

இப்பேச்சுக்கள்நடைபெறவிருக்கும் இந்தக்கடைசி நேரத்திலும் இருதரப்பினரும் ஒருவரைஒருவர் தாக்கி அறிக்கைவெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது சோவியத்யூனியன் சீனத்தலைவர்களைக் கடுமையாகத்தாக்கியிருக்கின்றது.

பல வருடங்களாக இருநாடுகளுக்குமிடையில் எல்லைப்பிரதேசங்கள்பற்றி ஏற்பட்டுள்ள கருத்துமுரண்பாடுகள் பற்றி துணைப்பிரதமர்கள் மட்டத்தில் கருத்துப்பரிமாறிக்கொள்வது இதுவே முதல்தடவையாகும்

இந்தப்பேச்சுக்கள் நீடித்து நடைபெறக்கூடுமென்றும் விரைவில் முடிவடையுமென்றும் கூறமுடியாது என்று அவதானிகள் கூறுகிறார்கள்

அண்மையில் வடவியட்னும் அதிபர் ஹோசிமின் காலமானபோது அவரது மரணச்சடங்குகளில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்று திரும்பும்வழியில் சோவியத்பிரதமர் திரு ஹோஸிஜின் பீகிங் சென்று அங்குசீனப்பிரதமர் சூ-என்-லாயைச் சந்தித்துப்பேசினார் அந்தப் பேச்சுகளைத் தொடர்ந்து இருதரப்பினரும் தங்களுககிடையிலான தகராறுகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் யுத்தத்தின்மூலம் இதற்கு முடிவுகாண முயலக்கூடாது என்றும் ஒப்புகொண்டன அதன்படியே நாளைய தினம் இந்தப்பேச்சுக்கள் ஆரம்பமாகவிருப்பதாகத் தெரிகின்றது.

பேச்சுகள் அவசரமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பீகிங் தனது நிலையைச் சிறிதும் விட்டுக்கொடுக்க முன்வராது என்று கருதப்படுகின்றது.

## “ஆராய்ச்சி தன்மையை வளர்க்க வேண்டும்”
### கல்லூரி அதிபர் அறிக்கை

பண்டத்தரிப்பு, ஞாயிறு

“மேலை நாட்டிலே சராசரி 22 வயதைக் கொண்ட பொறியியல் வல்லுனர்கள் அப்பல்லோ-11 பான்ற விஞ்ஞான சாதனைகளைச் செய்துகொண்டிருக்கும் போது நமது நாட்டு விஞ்ஞானிகள் ஒருசில சாதனைகளையாவது நிலைநாட்டமுன்வராதிருப்பதுமிகவும் வெட்கத்திற்குரியதாகும். நமது நாட்டுப் பள்ளிக்கூடங்களிலும் ஆய்வுகூட நூல்நிலைய வசதிகளை உருவாக்கி தரமான பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்மூலம் நமது பிள்ளைகளுக்கு சிறுவயதிலிருந்தே புதியனவற்றைக் கண்டு வியப்படைந்து ஆராய்ச்சி செய்யும் தன்மையை வளர்த்து அவர்கள்கல்வியில் கட்டுப்பாடமைந்த சுதந்திரத்தையும் கொடுத்தால் அவர்களும் எதிர்காலத்தில் சிறந்த விஞ்ஞானிகளாகத் திகழுவார்கள்.

இவ்வாறு பண்டைத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு என் சிவஞானம் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்க 4 வது ஆண்டுவிழாவில் சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழகத்திலுள்ள செனட்சபைகளும் தேசிய உயர்கல்விச்சபையும் பல்கலைக்கழக புகுமுக எழுத்துப் பரீட்சைமுடிந்து புள்ளி விபரங்கள் தெரிந்தபின்பும் புகுமுக நிபந்தனைகளை மாற்றுகிறார்கள். இதனால் மாணவர்கள் பெரும் அவதிப்படுகிறார்கள். இந்நிபந்தனைகளை இச்சபைகள் 4 ஆண்டுகளுக்கு முன்பே தெரிவித்தால் மாணவர்கள் வழிகாட்டி ஆசிரியர்களோடும் வகுப்பாசிரியர்களோடும் கலந்தாலோசித்து இந்நிபந்தனைகளுக்கமையத் தாங்கள் விரும்பும்துறைகளைத் தேர்ந்தெடுக்க உதவியாக இருக்கும் இது சம்பந்தமான ஏனைய பிரச்னைகளை ஆராய்வதற்கு ஓர் விசாரணைக் குழு அவசியம் நிறுவப்பட வேண்டும்.

## தாளையடி நவீன பாலத்தை எம். பி. திறந்துவைத்தார்

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு

உள்ளூராட்சி அமைச்சர் ஆர். பிரேமதாஸாவினால் பருத்தித்துறைத் தொகுதிக்கென ஒதுக்கப்பட்டு செம்பியன்பற்று கிராமசபைப் பகுதியில் தாளையடி மருதங்கேணி கடற்கரை வீதியில் அமைக்கப்பட்டநவீனவார்ப்புப் பாலத்தை பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் திறந்து வைத்தார் அதன் பின் நடைபெற்ற கூட்டத்துக்கு செம்பியன்பற்றுக் கிராமசபைத் தலைவர் திரு சி, முத்தையா தலைமை வகித்தார். ஆட்சிமன்ற உறுப்பினர் தனது உரையில் தனது தொகுதிக்கென ஒதுக்கப்பட்ட பாலத்துக்குரியஇடத்தைப் பொறியியலாளரே தேர்ந்தெடுத்ததாகவும் இப்பாலம் மட்டுமல்லாது இன்னும் இதே பகுதிக்கு தன்னாலான உதவிகள் பல செய்து கிராம முன்னேற்றத்துக்கு உதவுவதாகவும் கூறினார். மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.ஏ. ஜோசேப் மாவட்டப் பொறியியலாளர் திரு. புவனேந்திரன் ஆகியோரும் பேசினர்.

## வெள்ள நிவாரண நிதி

உரும்பராய், திங்கள்

உரும்பராய் கிராமசேவையாளர் பிரிவில் நாளை 21-ம் திகதி வெள்ள நிவாரணநிதி வழங்கப்படவுள்ளது. க்டந்த முறை இந்நிதி வழங்கப்பட்டபோது முழு நிவாரணமும் வழங்கப்படாததை எதிர்த்து தமிழரசு வாலிப முன்னணி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டிருந்தது

டெஸ்ட் கிரிக்கெட்

## நியூஸிலாந்து 175--8

புதுடில்லி, அக். 19

நியூஸிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையில் பாரதத்தில் நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இன்றைய ஆட்டம் முடிவடையும் போது நியூஸிலாந்து 2-வது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து 181 ஓட்டங்களையும், இந்தியா 89 ஓட்டங்களையும் பெற்றுள்ளது,

## கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் மேலும் நிறுவப்படும்

கோட்டை, ஞாயிறு

வருடா வருடம் மேலும் சில கனிஷ்ட பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு கல்வி இலாகா திட்டமிட்டுள்ளது

தற்போது நாட்டிலுள்ள 6 கஷ்ட பல்கலைக்கழகங்களிலும் 800 மாணவர்கள் கல்விகற்கின்றார்கள். அடுத்த வருடம் கல்வி இலாகா மேலும் 1000 மாணவர்களைக் கனிஷ்ட பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யவிருக்கிறது.

அடுத்த வருடம் மேலும் மூன்று கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரிகளை அரசாங்கம் நிறுவவிருக்கிறது. மட்டக்குளியா, வரக்காபொல, ஹோமஹம ஆகிய மூன்று இடங்களில் இந்தக் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிகள் நிறுவப்படும்.

### மருந்து விநியோகம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாணவ மாணவியர்க்கு பூச்சு மருந்தும் சிறுவர்களுக்கு ‘அன்டிபா’ரும் கொடுக்கப்பட்டது பாடசாலைகளுக்கு வராத சிறுவர்களுக்கு வீடு


# ஐவுளி விற்பனை!

இன்று முதல் ஆரம்பம்

## வலி-மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், சங்கானை.

உள்ளூரில் மின்தறியில் தயாரிக்கப்பட்ட நல்ல தரமான-திறமான ஐவுளிகள் நியாய விலைக்குக் கிடைக்கும்!

உங்கள்தேவைகளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசங்கள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.

★ சாறிகள் ★ ரவுக்கைத்துணிகள் ★ வேட்டி ★ சால்வைகள் ★ காற்சட்டைத்துணிகள்

தரத்துக்கும், நீண்டகால பாவனைக்கும் உறுதியும், உத்தரவாதமும் அளிக்கப்படும். வடபகுதி கூட்டுறவு வரலாற்றில் ஐவுளி உற்பத்தியில் இது ஒரு புதிய சாதனை! புதிய திருப்பம்!

வியாபார விபரங்களுக்கு:-

வலி-மேற்கு ப. நோ, கூ. ச சமாசம், சங்கானை.

தொலைபேசி: 525


## ஜாதிக சம்பத முடிவுகள்

கொழும்பு, திங்கள்

நேற்று இரத்தினபுரியில் வைத்து அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 8ம் இலக்க ஜாதிக சம்பத சுவீப் முடிவுகள் வருமாறு:

1வது பரிசு: 08 F 001249 ரூ 1,50,000
2வது பரிசு: 18 C 000091 ரூ 1,25,000
3வது பரிசு: 16 P 000645 ரூ 1,00,000

தலா 165 ரூபா 50 சதம் பெறும் 200 டிக்கட்டுகள்,

| | | |
|---|---|---|
| 06 A 001427 | 06 B 000022 | 17 C 001073 |
| 08 C 001539 | 17 C 001720 | 14 C 000405 |
| 21 D 001650 | 07 D 000648 | 03 D 001834 |
| 01 E 000011 | 21 E 001410 | 14 E 000766 |
| 07 E 001450 | 18 F 000052 | 10 F 000572 |
| 02 F 000851 | 12 F 000605 | 02 G 001810 |
| 20 G 000876 | 14 G 001374 | 04 G 001932 |
| 09 H 001501 | 12 H 001730 | 20 H 001641 |
| 08 H 001273 | 20 H 001115 | 17 J 000664 |
| 05 J 000158 | 18 J 000384 | 15 J 000341 |
| 05 J 001450 | 03 J 000543 | 13 K 000854 |
| 18 K 001755 | 04 K 000826 | 13 K 000840 |
| 14 L 001328 | 09 L 000582 | 06 L 000399 |
| 07 M 000914 | 16 M 001847 | 12 M 001763 |
| 17 M 001231 | 01 M 001482 | 06 N 001361 |
| 01 N 000641 | 17 N 001082 | 02 O 001110 |
| 16 o 000400 | 19 o 001866 | 16 o 000018 |
| 11 o 001456 | 17 o 001405 | 17 o 001606 |
| 11 o 001858 | 18 P 001545 | 14 P 000471 |
| 16 Q 001211 | 22 Q 000925 | 18 Q 000983 |
| 17 Q 001489 | 16 Q 000185 | 22 R 000983 |
| 09 R 000095 | 22 R 000933 | 13 R 000097 |
| 18 R 001138 | 10 S 000167 | 08 S 000554 |
| 14 S 000369 | 12 S 001989 | 06 T 001094 |
| 14 T 000403 | 18 T 000822 | 03 T 000407 |
| 07 U 001169 | 16 U 001492 | 05 U 001473 |
| 12 U 000802 | 21 V 001304 | 01 V 000299 |
| 05 V 000578 | 02 V 000346 | 06 W 000753 |
| 04 W 000907 | | 15 W 001503 |
| 19 W 000381 | 10 W 001999 | 18 X 001809 |
| 08 X 001697 | 15 X 001171 | 03 X 000174 |
| 18 X 000230 | 16 X 000592 | 19 X 000847 |
| 05 Y 000900 | 14 Z 001600 | 14 Z 001667 |
| 11 Z 000466 | 07 Z 001133 | 16 F 000384 |
| 16 U 000021 | 18 P 001543 | 11 F 000076 |
| 09 M 001509 | 14 D 001928 | 19 Y 001450 |
| 16 Q 000265 | 12 M 001016 | 06 L 001427 |
| 01 R 001958 | 14 M 001595 | 09 G 000416 |
| 05 L 001300 | 08 U 000657 | 11 V 001799 |
| 18 Q 000246 | 09 P 001642 | 11 X 000183 |
| 18 L 000323 | 03 Q 000861 | 12 G 000072 |
| 14 R 001635 | 03 G 001952 | 02 C 001639 |
| 06 Q 001081 | 13 V 001161 | 18 M 000212 |
| 11 K 000117 | 04 G 000275 | 05 Y 000389 |
| 07 Y 001056 | 07 Q 000846 | 19 F 000315 |
| 17 M 001869 | 07 R 001565 | 19 E 001360 |
| 07 S 001816 | 15 D 001004 | 19 Y 000351 |
| 15 T 000949 | 07 H 000130 | 04 W 001622 |
| 20 Q 000931 | 01 F 000642 | 20 L 001885 |
| 06 U 001629 | 11 M 000905 | 03 A 001802 |
| 06 A 000885 | 03 S 001825 | 04 W 000531 |
| 15 P 000850 | 07 T 001519 | 03 V 000709 |
| 22 X 001339 | 14 R 001691 | 21 C 000046 |
| 20 M 001243 | 20 G 001694 | 02 H 001792 |
| 13 Z 001794 | 15 M 001409 | 10 X 001810 |
| 11 K 001325 | 17 P 000303 | 18 S 001438 |
| 18 D 000889 | 05 C 001900 | 03 Z 001260 |
| 21 F 001160 | 22 B 000104 | 20 X 001922 |
| 11 Y 000235 | 21 E 000170 | 06 C 01691 |
| 03 A 000832 | 13 L 000070 | 09 R 000057 |
| 15 Z 001368 | 01 V 001545 | 06 U 000760 |
| 11 o 000495 | 16 E 001615 | 05 E 000709 |
| 16 E 001906 | 10 o 001475 | 10 D 001802 |
| 08 U 001519 | 10 N 001625 | 20 R 000179 |
| 07 V 000604 | 15 E 001454 | 07 Y 001530 |
| 05 J 000654 | 13 F 001235 | 11 N 000963 |
| 21 W 001550 | 16 Q 000717 | 22 P 001243 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு 1969 டிசம்பர்பரீட்சை G. C. E. (O/L) தமிழ்மொழி பகுதி 1 மாதிரிகை வினுத்தாள்கள் பத்து இடம் பெற்றுள்ள பத்தாம் தமிழ்மலர்ப் பயிற்சி வினு-விடை விலை 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
1476

### வாடகைக்கு

வீடு:

மகாஜனக் கல்லூரியிலிருந்து அரை மைல் தூரத்தில் பன்னுலை பண்டத்தரிப்பு ரோட் ஓரம் சகல வசதிகள் இணைந்த வீடு உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு: கி. காசிப்பிள்ளை வில்லவாசம், பன்னுலை, தெல்லிப்பளை.
1486

### WANTED

Assistant Weaving Master with Power Loom experience Salary according to qualifications, Advt. No. 1487, C/o Eelanadu, Jaffna.
1487

## இமையாணனுக்கு வெற்றிக் கேடயம்

உடுப்பிட்டி, ஞாயிறு

இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் வடமராட்சியில் பல கழகங்கள் நடாத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றுள்ளது.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் கழகம்நடாத்தியகரபந்தாட்டச்சுற்றுப்போட்டியில்நவஜீவன்சுக்கும், இமையாணனுக்கும் இடையே ஏற்பட்ட மோதலிலும் வல்வெட்டித்துறை றெயின்போ விளையாட்டுக்கழகம் நடாத்திய போட்டியில் வதிரி பொமேரஸ் விளையாட்டுக்கழகத்துடன் மோதியபோட்டியிலும் கொற்றுவத்தை றேஞ்சேர்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய கரபந்தாட்ட இறுதிப்போட்டியிலும் நவஜீவன்ஸ் கழகத்தை இமையாணன் வென்றது.

உடுப்பிட்டி நேதாஜி விளையாட்டுக்சுழகம் நடாத்திய போட்டியில்சுடரொளி விளையாட்டுக்கழகத்தையும், சுடரொளி விளையாட்டுக்கழகம் நடாத்திய போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தையும் இமையாணன் விளையாட்டுக் கழகம் வென்றது.

பல போட்டிகளிலும் வெற்றிவாகை சூடியதால் இமையாணன் விளையாட்டுக் கழகம் வெள்ளிக்கிண்ணங்களையும், வெற்றிக்கேடயங்களையும் சுவீகரித்துக்கொண்டது.

## டேவிட் பிறவுண் 850 உழவு இயந்திரம் விற்பனைக்கு

25 ஸ்ரீ 1077 உழவு இயந்திரம் பெட்டியுடன், தனியாள் பாவிப்பு. பூநகரி ப. நோ. கூ. சங்க சமாசத்தில் வேலை நேரங்களில் பார்வையிடலாம். எழுத்து மூலம் கோரியகூடிய கேள்வி ஏற்கப்படும். விண்ணப்பங்கள் 25-10-69இல் முடிவடையும். தலைவர், பூநகரி பல. நோ. கூ. சங்கச் சமாசம், பூநகரி.

த. காசிராசா
காரியதரிசி
1781

## என்றியரசர் வெற்றி

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்பு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்ககழகத்துக்கும், இளவாலை என்றியரசர் கல்லூரிக்குமிடையே கல்லூரிமைதானத்தில்நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் என்றியரசர் கல்லூரி 3 கோல்களைப்போட்டு வெற்றியீட்டியிருக்கிறது.

## கம்யூ. ஜனசங் மோதலில் ஒருவர் பலி

கள்ளிக்கோட்டை, அக்.19

கேரளத்தில் கள்ளிக்கோட்டைக்கு அருகில் பய்யொலி என்ற கிராமத்தில் இடதுசாரி கம்யூனிஸ்டுகளும் ஜனசங்க ஊழியர்களும் பயங்கரமாக மோதிக்கொண்டார்கள் இதில் ஒருவர் பலியானுர் 65 பேர் காயமடைந்தார்கள்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 20—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 திரைகானம் ,1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 புல்லாங்குழல், 7-35 பேச்சு, 7-45 ஐக்கியநாடுகள் சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 சரஸ்வதிபூஜை அஞ்சல், 10-30 செய்திச்சுருக்கம்.

## உதைபந்தாட்டம்

சுழிபுரம், ஞாயிறு

காரைநகர் இந்துக்கல்லூரி உதைபந்தாட்ட கோஷ்டிக்கும், சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி உதைபந்தட்டக் கோஷ்டிக்குமிடையே சினேகித பூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் காரைநகர்இந்துக்கல்லூரிகோஷ்டி 1-0 கோல்களால் வெற்றிபெற்றது. சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு, எஸ். சோமசுந்தரம் மத்தியஸ்த்தராக கடமையாற்றிஞர்.

உடுப்பிட்டியில்

## தேசிய இளைஞர் பேரவை

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டித் தொகுதியிலும்தேசியஇளைஞர்சேவைப் பேரவை நிறுவப்பட விருக்கிறது. இப்பேரவையில் சேர்ந்து கடமையாற்ற இப்பகுதி வாலிபர்கள் விருப்பம் தெரிவித்து வருகின்றனர். இதனைத்தொடர்ந்து வாலிபர் கோஷ்டியொன்று உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு.மு.சிவசிதம்பரத்தைச்சந்தித்து உடுப்

## 'சோஷலிச சமூகஅமைப்பே இலங்கைக்கு அவசியம்'

உடுப்பிட்டி, புலோலி, ஞாயி.

''மனிதனைமனிதன் சுரண்டாத சோஷலிஷ சமூக அமைப்பின் கீழ்தான் இனவிடுதலை பெற முடியும். அரசியல் துறையில் இக்கொள்கைதான் சரியானதென்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. ஆட்சிமன்றப் பிரதிநிதித்துவப் பலத்தின் அடிப்படையில் அல்லது தனிப் பெரும் தலைவர்களின் அசுர சாதனைகளில் நம்பிக்கை வைப்பது பெரும்ஏமாற்று வித்தை என்பதை இன்று அனைவரும் உணர்ந்து கொள்ளும் நிலை ஏற்பட்டு விட்டது. மனிதனை மனிதன் சுரண்டாத, சமூகத்தைச் சமூகம் தாழ்த்தாத, இனத்தை இனம் வெறுக்காத ஒரு சோஷலிஷ சமூக அமைப்பே இலங்கைக்கு அவசியம்''.

இவ்வாறு வெள்ளிக்கிழமை நெல்லியடியில் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளன யாழ். மாவட்டக்கிளையின் 6- வது மகாநாட்டில் வடபிரதேச கம்யூனிஸ்ட்கட்சிப் பொதுச் செயலாளர் திரு.வீ. பொன்னம்பலம் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டார்.

வேலை இல்லாத் திண்டாட்டம் எமக்குமத்தியில் தொடர்ந்து நிலவுமாஞல் வாழ்க்கைச் செலவு மேலும் விஷம் போல் ஏறிக்கொண்டே செல்லும் எமது ரூபாவின் மதிப்பு தொடர் குறைந்துகொண்டே இருக்குமாஞல் விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய அரசாங்கத்திஞல் முடியாமல் போகும். எமது நாடு சுய உற்பத்தியில் ஈடுபடாமல் ஏகாதிபத்திய நாடுகளுக்கு மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும் கையாளாக இருப்பதே இவற்றிற்கெல்லாம் காரணம். எமது நாட்டின் பொருளாதார அடிப்படை அமைப்புக்களை மாற்றுவதன்மூலமும், வெளிநாட்டு முதலாளிகளின் மூலதனங்களையும் தொடர்புகளையும் படிப்படியாக வெட்டுவதின் மூலமும் நட்புறவான சோஷலிஷ நாடுகளின் உதவியும் பொருளாதாரத்தை விஸ்தரித்துப் பரவலாக்குவதின் மூலமும் தான் பொருளாதார சுபீட்சம் பெறமுடியும்

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம்தான் தமிழைக்காப்பதற்கும், தமிழ்க்கலாச்சாரத்தைமேலும் வளர்ப்பதற்கும் ... யொன்று தேவையென்ற கருத்தை முதலில்வெளியிட்

வாழ்ந்துவருகின்றனர். கடந்த மூன்ருண்டு காலமாகச் சமூகக்குறைபாட்டுக் கொடுமையை ஒழிக்கப்போராட்டம் நடைபெற்று வருகின்றது.

யாழ். குடாநாட்டிலே நிலவிவரும் ஏற்றத்தாழ்வுகள், சமுதாயக்கொடுமைகள் முதலியவற்றைத் தகர்த்து, தமிழினத்தின் மத்தியில் ஒரு ஜனநாயக சமுதாயத்தை மலரச் செய்ய வேண்டும். சாதிக்கொடுமைக்கு சமாதி கட்ட வர்க்கப்போராட்டமே ஒரேவழி. சாதியமைப்பைத் தகர்த்தெறியக் கம்யூனிஸ்ட் வாலிபர்களாகிய நாம் தொடர்ந்து போராடியே தீருவோம். அண்மைக்காலத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனித உரிமை எழுச்சியைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். உழைக்கும் மக்களின் விடுதலைக்கு இனச்சகோதரத்துவம் ஏற்படுத்துவது அவசியம்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பெற்ருர் ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப்பின்வருவோர் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். சிவசுப்பிரமணியம் (கல்லூரி அதிபர்), உபதலைவரி: செ. திருநாவுக்கரசு, செயலாளர்: எஸ். இராமநாதன், தனுதிகாரி: கே. எஸ். சிவானந்தன்.

## இலக்கிய வட்ட நிர்வாகிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

இலங்கை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி அலுவலகத்தமிழ் இலக்கியவட்ட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

காப்பாளர்: திரு. க. நவரத்தினராசா, தலைவர்: திரு. ச. ஆனந்தநடராசா, உபதலைவர்: திரு. ஜே. சத்தியநாதன், செயலாளர்: திரு. தி. விக்னேஸ்வரதாசன், உபசெயலாளர்: திரு. எம். குமாரசாமி, பொருளாளர்; திரு. நா. உலகநாதன்.

## பெற்ருேர் புகார்

குருநாகல், ஞாயிறு

குருநாகல் பகுதியிலுள்ள பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இங்குள்ள பாடசாலைகளில் கல்விகற்க

## ஓய்வு பெறுகிருர்

தானங்களில் சிறந்தது வித்தியாதானம், அதிலும் பெரியது கல்விச்சாலை நிறுவுதல். மேலான கைங்கரியத்தை எமது பாடசாலைத் தலைமையாசிரியர் திரு நாகலிங்கம் பலநாள் சிரமதானப்பணி புரிந்து நிறைவேற்றியமை நாம் அறிந்ததே. நமது கிராமத்தில் சைவப் பாடசாலையொன்றை நிறுவுவதற்கு ஒரே பிடிவாதத்துடன் உழைத்த செயல்வீரர் நமது ஸ்தாபகர். பாடசாலையை ஸ்தாபித்ததும் அதனைநிர்வகிக்கும் பொறுப்பும் இவரையே நாடி நின்றது எனவே நமது ஸ்தாபகர் தலைமையாசிரியர் பதவியையும் ஏற்று சீரானமுறையில் செயலாற்றியமையை நாம் பாராட்டாது விடமுடியாது. இவர்தம் ஆரம்பக் கல்வியை சைவ வித்தியாசாலையில் ஆரம்பித்து கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பட்டம் பெற்று ஆரம்ப சேவையை மயிலணி சைவ வித்தியாசாலையில் மேற்கொண்டார். பின் 1940-ம் ஆண்டு சுன்னுகம் நாகேஸ்வரி வித்தியாசாலையை ஆரம்பித்தார். இப் பாடசாலையிலிருந்து வருடந்தோறும் அனேகசிறுவர்சிறுமியர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு உயர்கல்விபயிலுவதற்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

எமது தலைமையாசிரியர் வித்துவான் கணேசையரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றுள்ளார், அவர் முறையையே பின்பற்றியுள்ளார் என்பதற்குக் காரணம் ஆசிரியர் அவர்கள் எழுதும்போதும் பேசும்போதும் பசுமரத்தாணி போல் இளம் உள்ளங்களில் தூயதமிழறிவு பதிவதேயாகும். பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயரவர்களுடன் நூலை நயக்கும் முறையில் எமது தலைமையாசிரியரும் சேர்ந்து செயலாற்றி உள்ளார், இவற்றினுக்குமேலாக கவிபுனையும்திறமையும்நமது முதல்வரிடத்தே உண்டு. இப்படியே செழிக்கும் செந்தமிழ் கடலில் ஆழ்ந்து கொண்டிருக்கச் செய்யக் கூடிய நமது தலைமையாசிரியர் திரு க. நாகலிங்கம் அவர்கள் தமது 40 வருட சேவையின்பின் 16.10-69 ல் இளைப்பாறிஞர். அவருக்கு நீண்ட நிறைந்த வாழ்வருளும்படி இறைவனை வணங்குகிருேம்.



வ. ஐ. மே. சபை

## வருடாந்த மகாநாடு

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையின் வருடாந்த கூட்டுறவு மகாநாட்டை இம்மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில், மக்கள்வங்கி தலைவர் திரு. ரி. பி. பானபொக்கே ஆரம்பித்துவைப்பார்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் தலைமையில் காலையில் நடைபெறும் இம்மகாநாட்டில், கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. டபிள்யூ பத்திராஞ சொற்பொழிவாற்றுவார். அன்று பிற்பகல் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எப். சி. பீற்றேர்ஸ் தலைமையில் நடைபெறும் மகாநாட்டில் கைத்தொழில் அபிவிருத்திச்சபையைச் சேர்ந்த திரு. ஏ. எம். ஆரிய அபேசிங்கா சொற்பொழிவாற்றுவார்.

உ

## திருமண அழைப்பு

இராமசாமி ஐயர் — சுந்தரலட்சுமி

| மணமகன் | மணமகள் |
|---|---|
| மானிப்பாய் | நல்லூர்கைலாச பிள்ளையார்கோவில் |
| சீ. இரத்தினசாமிக்குருக்கள் | கு. குருசாமிக்குருக்கள் |
| தம்பதிகள் புத்திரன் | தம்பதிகள், புத்திரி |
| செல்வன் | செல்வி சுந்தரலட்சுமி |
| இராமசாமி ஐயர் (மணி) | |

முகூர்த்தநாள்:- சௌமிய ஸ்ரீ ஐப்பசி 9உ (25-10-69) சனிக்கிழமை மு. ப. 10-30 — 11-55 தனுர் லக்கினம்.

இடம்:- நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில்.

வரவேற்பு:- மணமகனில்லத்தில் பி ப. 4-30 மணி முதல்

எம்பிரான் பிள்ளையார் திருவருளை முன்னிட்டு நிகழும் இத்திருமண வைபவங்களில் உறவினர்களையும், நண்பர்களையும் சமுகமளித்து ஆசி கூறும்படி விநயமாக அழைக்கிருேம்

வணக்கம்

உடுவில் வீதி,
மானிப்பாய்,
20-10-69.

இ. சீதாபதி ஐயர்
தம்பதிகள்

1796

இப்பொழுது திரையிடப்படுகின்றது

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி4காட்சிகள்

★ ரவிச்சந்திரன்,
★ ஜெயலலிதா

களைகள்
எல்லாவற்றையும்
ஒழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது திரையிடப்படுகிறது

# வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி4காட்சிகள்

★ ரவிச்சந்திரன்,
★ ஜெயலலிதா
★ நாகேஷ்
நடித்த

## அன்று கண்ட முகம்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி--நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த

## லக்ஷ்மி கல்யாணம்

இப்பொழுது நடைபெறுகிறது


## வெலிங்டன்

[யாழ். நகர்]

தினசரி 2-30, 6-30 9-30 போயா, பிரிபோயா 4 காட்கள்

கெப்பிட்டல் (கொழும்பு)

பிளாஸா (கொழும்பு)



ரவிச்சந்திரன் ★ ராஜ்ஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஜரிஸ் மூவிஸாரின்

## நீயும் நானும்


...லும்தேசியஇளைஞர்சேவைப் பேரவை நிறுவப்பட விருக்கிறது. இப்பேரவையில் சேர்ந்து கடமையாற்ற இப்பகுதி வாலிபர்கள் விருப்பம் தெரிவித்து வருகின்றனர். இதனைத்தொடர்ந்து வாலிபர் கோஷ்டியொன்று உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரத்தைச்சந்தித்து உடுப்பிட்டித் தொகுதியிலும் தேசிய இளைஞர் சேவைப் பேரவையை அமைக்குமாறு வற்புறுத்த விருப்பதாகத் தெரிகின்றது.


இன்றுமட்டும்

## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த

## பாலும்பழமும்

வல்வெட்டித்துறை

## ரஞ்சனா தியேட்டர்

தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த

## மாடப்புரு

## ஸ்ரீ காலிங்கா

இணுவில்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
நடித்த

## அரசகட்டளை

## ராஜா

(யாழ்ப்பாணம்)
Daily 4-45, 7, 9-45 P.M.
Poya, Prepoya 4 Shows
Beautiful Girls Daring acts
in
SEXY ALLNEON
(Adults only)

## REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p m.
Giuliano Gemma
in
ARIZONA COLT
(Technicolor - Cinemascope)

## MANOHARA JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45pm
Poya Prepoya 10-30 a. m.
Restless Reckless Violent-
There never was a man like
'BLUE'
Terence Stamp
Joanna Petter
in
'BLUE'
(Scope-color)


பரவலாக்குவதின் மூலமும் தான் பொருளாதார சுபீட்சம் பெறமுடியும்

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம்தான் தமிழைக்காப்பதற்கும், தமிழ்க்கலாச்சாரத்தை மேலும் வளர்ப்பதற்கும் சர்வகலாசாலையொன்று தேவையென்ற கருத்தை முதலில்வெளியிட்டது. இப்படி ஒரு கலாச்சாரப்பல்கலைக்கழகத்தை உருவாக்காமல் விடுவதினால் தமிழ் மொழியின் வளர்ச்சி தடைப்படும்.

பழைய நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு யாழ்ப்பாணத்தில் முற்றாக ஒழிக்கப்படவில்லை. சிறுபான்மைத் தமிழர்கள் அடிப்படைமனித உரிமைகள் மறுக்கப்பட்டு ...றனர்.

## பெற்றோர் புகார்

குருநாகல், ஞாயிறு

குருநாகல் பகுதியிலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இங்குள்ள பாடசாலைகளில் கல்விகற்க அனுமதி பெறுதல் கஷ்டமாகவிருக்கிறதெனப் புகார் தெரிவித்துள்ளார்கள்.

இங்குள்ள சகல பாடசாலைகளிலும் ஏற்கனவே மாணவர் தொகை கூடிஇடவசதியின்மையில் இங்கு தம் பிள்ளைகளுக்கு இடம் தேடும் பெற்றோர்களுக்கு இது பெரும் பிரச்னையாகவிருக்கிறது.

# இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 4-ந் திகதி (20 - 10 - 69)

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள். கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும். வாகனம்செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர். சுபதினம்.

**ரிஷபம்**- இதயத்தில் இனிமை துள்ளும், பகைவர்கள் பணிவர். வணிகர்களுக்கு வியாபாரவிருத்திஉண்டு. பரந்தநோக்குடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

**மிதுனம்**- திகைக்கவைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம். அரசினரின் ஆத்திரப்பார்வையும் உங்கள் பக்கம் திருப்பமுடியும். கோஷ்டிச்சண்டையில் மாட்டிக் கொள்ளாதிருக்கவும்.

**கடகம்**- எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும். மற்றவர்கள் மெச்சும்வண்ணம் கடமையாற்றுவீர்கள். இதயத்துக்கு இதமளிக்கக்கூடிய பரிசும் கிடைக்கலாம். ப்வண்டியவர்களின் ஆதரவும் பெருகும்.

**சிம்மம்**- பிரச்னைகள் மேலும் சிக்கலாகும். உணவு விடயத்தில் பிரியக் குறைவு தென்படும். கூர்மையான ஆயுதங்களுடன் புடிகாதிருப்பது நன்று. உடல்நலனில் அதிக கவனம் வேண்டும்.

**கன்னி**- இன்று முன்னணியில் நிற்பீர்கள். நல்ல தீர்ப்பு வழங்கும். சந்தர்ப்பமும் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை மேலோங்கும். குறிக்கோளில் வெற்றி கிடைக்கும். இலட்சியவாதிகளுக்கு இன்று பொன்னானதினம்.

**துலாம்**- முயற்சியால் உயர்ச்சியுண்டு. பணவிவகாரங்களில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். வெளியிடத்தில் இருந்து நல்லசெய்தி கிடைக்கும். வீட்டில் சுபகருமங்கள் நடைபெறும். சுகபோகநாள்.

**விருச்சிகம்**- புதுமையான சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**தனுசு**- பல வழிகளிலும் தொல்லைகள் தோன்றும். விரக்திமனப்பான்மையுடன் நடமாடுவீர்கள். தொழில் புரியும் இடத்தில் எதிரிகள் மறைமுக நடவடிக்கைகளில் இறங்குவார். அவதானம்வேண்டும்.

**மகரம்**- சுறுசுறுப்புக் குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்தில் சிறுபூசல்தோன்றி மறையும். கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும் அமைதி நன்று.

**கும்பம்**- மனம் நிறைந்த வாழ்வு, மக்களால் மகிழ்ச்சி. இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். உறவினர்கள் உதவிக்கு ஓடிவருவர். செல்வாக்கு பெருகும்.

**மீனம்**- சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதட்டநிலைதென்படும். அவசர முடிவின் மூலம் குறை கேட்க நேரிடும், பல வழிகளிலும் பணம் விரயமாகும். உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.


# எல்லாவற்றையும் ஒழித்து விளைச்சலைப் பெருக்க

புதிய சீர்ப்படுத்திய

# ஸ்டாம் எப்-34




புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34, உங்கள் விளைச்சலைச் குறையாடும புற்கள், முட்கோரைப் புற்கள், அகன்ற இலைக்களைகள் அனைத்தையும் தேர்ந்து அழித்து ஒழிப்பதின் மூலம் அமோக நெல் வேளாண்மைக்கு உத்தரவாதமளிக்கிறது.

புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34 இல் 36% டி. பி. ஏ. இடம் பெற்றுள்ளது. இக் களைப்புற்கொல்லி தெளிகருவியின் பீச்சு முனைகளில் கட்டி பட்டு அடைத்துக் கொள்வதில்லை. இதனை அடைப்பத் தெளிகருவி மூலமோ மிஸ்ட் புளோவர் மூலமோ தெளிக்கலாம். முன்னைப் பொழுதைப பார்க்கிலும் சிறப்பான வகையில் இது களைகளைக் கட்டுப்படுத்தகிறது.

அதிக நெல பயிரிட்டுக் கூடுதல் இலாபம் சம்பாதிக்க உபயோகியுங்கள் "ஸ்டாம்" எப் - 34.

ஷெல ரசாயனப பொருடகள

SHELL

ரசாயனப்பொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலித் தரையில் அப்பல்லோ வீரர்கள் கார் ஓட்டி சோதனை நடத்துவர்

## குறித்தபடி போய் இறங்குவது இன்னும் ஓராண்டில் சாத்தியமாகும்

ஹூஸ்டன் அக்டோபர் 19

**சந்திரனில் போய் இறங்கும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் அங்கு நிலாவுத்தரையில் காரில் பிரயாணம் செய்து ஆராய்ச்சிகள் நடத்துவார்கள். இது அனேகமாக இன்னும் ஓர் ஆண்டில் சாத்தியமாகலாம்.**

**இதுமட்டுமன்று, இப்போது போலன்றி குறித்த படி சந்திரனில் போய் இறங்குவதற்கும் அங்கு விரிவாக ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும் இன்னும் ஓர் ஆண்டுக்குள் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு வீடும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.**

சற்றேறத்தாழ இன்னும் ஓராண்டில் அமெரிக்க அப்பல்லோ விண்வெளி வீரர்கள் குறித்தது குறித்தபடி நிலாவில் போய் இறங்குவார்கள். ஒரு ஹெலிகப்டர் விமானம் எப்படி இறங்கு தளத்தில் துல்லியமாக இறங்குகிறதோ, அதுபோல அவர்கள் நிலாத்தரையில் இறங்குவார்கள். சுற்றிலுமுள்ள நில அமைப்பை ஆராய நிலவுக்கார் ஒன்றில் சந்திரனில் பிரயாணம் செய்வார்கள்.

விண்வெளி விமானிகள். தம்முடன் ஏராளமான விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு செல்வார்கள். நிலாவின் சமவெளிகளிலும் மலைப் பகுதிகளிலும் பல வகையான இடங்களில் இறங்குவார்கள். 60 மணிநேரம் அங்கு தங்கியிருப்பார்கள். நிலாக்கப்பலிலுள்ள மஞ்சங்களில் தனிவிண்வெளி உடுப்புக்கள் எதுவுமில்லாமல் வழக்கமான ஆடைகள் அணிந்து தூங்குவார்கள்.

இந்தப் பணிகள் புரிவதற்கான நிலவுப் பயணங்கள் (அப்பல்லோ -16முதல் 20 முடிய) 1971-ல் தொடங்கும். ஆண்டுக்குமூன்றுவீதம் நடைபெற்று 1972ல் முடிவடையும்.

### எப்படியிருக்கும்

அப்பல்லோ-17விண்வெளிக் கப்பலில் நிலவுக் கார் முதல் தடவையாக நிலாவுக்குக் கொண்டு செல்லப்படும். இதில் இரு விண்வெளி விமானிகள் ஐந்து மின்கலங்களின் மின்விசையால் நிலவுக் கார் ஓடும்.

அமெரிக்க விண்வெளிநிலையத்தின் (நாஸா) முன்னேற்றப்பணிகள் அலுவலகத்தைச் சேர்ந்த ஜோஸஃப்பி, லாஃப்ட்டஸ் செய்தியாளர் கூட்டத்தில் மாபெரும் வருங்கால நிலவுப்பயணங்கள் பற்றி விளக்கினர். நிலவுக் காரை ஏற்றிச் செல்வதற்கும் கூடுதல் எரிபொருள் வைத்திருப்பதற்கும், கூடுதலான சோதனைகள் செய்வதற்கும் உரிய பெரிய திருத்தங்கள் செய்யப்படுவதால் ஸாட்டர்ன்-அப்பலோ பொறியின் முழு ஆற்றலும் பயன் படுத்தப்பெறும் என்றார்.

வரும் நவம்பர் 14-ந்தேதி அப்பல்லோ-12 விண்வெளி கப்பலில் விமானிகள் சார்லஸ் கான்ராடு, ரிச்சர்டு கார்டன், ஆலன் பீன் மூவரும் சென்று, நிலாவில் 'புயல் கடல்' பகுதியில் இறங்க இருப்பது நினைவிருக்கும், அப்பல்லோ- 13,14, 15 ஆகிய பயணங்களும் நவம்பரில் நடக்கும் பயணத்தைப் போன்றவையே.

இவைபோய் இறங்கும் இடங்கள் மாறுபடும். ஆனால் நிலாத் தரையில் தங்கியிருக்கும் காலமும், செய்யும் பணிகளும் ஒரே மாதிரியானவையே. (அதாவது அப்பல்லோ-12 விமானிகள் தங்கும் காலமும் செய்யும் பணிகளும் போன்றவையே) ஐந்து விஞ்ஞானக் கருவிகள் கொண்ட ஒரு தொகுப்பை அமைப்பார்கள். இரு விமா

அப்பல்லோ-16 முதல் 20 முடிய ஒவ்வொரு பயணம் புறப்பாடு முதல் வத்திறங்குவது வரை பதினைறரை நாட்கள் நீடிக்கும். ஒவ்வொரு தடவையும் அப்பல்லோ தாய்க் கப்பல் தனியாக ஏறத்தாழ மூன்று நாட்கள் நிலாவைச் சுற்றிக் கொண்டிருக்கும்.

### விஞ்ஞானக் கருவிகள்

இவ்வாறு மீண்டும் மீண்டும் நிலாவை வலம் வருவது தாய்க்கப்பலில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் நிலாத் தரையின் விரிவான ஒரு பாதையைப் பார்வையிடுவதற்கு வகை செய்யும். நிலாவின் பல இலக்குகளையும் துல்லியமாகப் படமெடுக்க ஒரு கருவியும், விரிவாகப் படமெடுக்க ஒரு கருவியும், தொலைவிலிருந்து இயக்கப்படும் உணர்வுக் கருவிகளும் ஒரு ரடார் பொறியும் தாய்க்கப்பலில் இருக்கும் "நிலாவின் உள் அமைப்பு எப்படிப்பட்டது எனத்தெரிந்து கொள்ள மேல் பரப்புக்கு அடியில் துருவிப் பார்க்க வல்லவை" உணர்வுக் கருவிகளும்ரடார் பொறியும்.

நிலவுக் கார், நிலாவாகனம் ஆகிய இரண்டுக்கும் இடம் அளிப்பதன் பொருட்டு, அப்பல்லோ கப்பலிலுள்ள எரிபொருள் தொட்டிகளும், பிறபொறிகளும் நெருக்கமாகப் பிணைந்து. குறைந்த இடத்துக்குள் அடக்கி வைக்கப்படும். இவ்வா

## அரபுக்கள் அறுவர் கொல்லப்பட்டனராம்

டெல்அவிவ், அக். 19

நேற்று சிரியா, லெபனன், ஜோர்டான் ஆகிய நாடுகளின் எல்லைப் புறத்தில் அரபுப் படைகளுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் நடைபெற்ற பலத்த சண்டையில் ஆறு அரபுக்களைக்கொன்று விட்டதாக இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே ஜோர்டான் பள்ளத்தாக்கில் இடம் பெற்ற ஒருசண்டையில் இஸ்ரேலியர் பலரை ஜோர்டானியர் காயப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டது.

## "நான்மறைந்தபிறகும் காமராஜர் வாழ வேண்டும்"

### கருணாநிதியின் விருப்பம்

சென்னை, அக். 19

காமராஜர் பாராட்ட வேண்டும்என்பதற்காக அவருக்கு முன்னதாகவே தாம் இறந்துவிடவேண்டும் என்று விரும்புவதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி கூறினார்.

அண்ணா உயிருடன் இருக்கும்போது அவரைத்திட்டிக் கொண்டிருந்த காமராஜர் இப்பொழுது அவரை நல்லவர் என்று பாராட்டியிருப்பதாகவும் எனவே தாம் மறைந்தபின் தாம் செய்த நல்ல காரியங்களைப் பாராட்டக் கூடும் என்றும் திரு. கருணாநிதி கூறினார். என் மறைவு காலம் வரையிலும், அதன் பின்னரும் காமராஜர் வாழ வேண்டும் என்று விரும்புகிறேன் என்றார் திரு. கருணாநிதி.

சென்னையில் அண்ணா நகரில் அண்ணா சிலை திறப்பு விழாவில் அவர் பேசினார். அவர் கூறியதாவது: 'வேண்டும்என்றே கருணாநிதிஎன்னை மிரட்டுகிறார். காங்கிரசை மிட்டுகிறார். அண்ணாதுரை நல்லவர்' என்று காமராஜர் பேசி இருக்கிறார்.

இதைப் படித்துப் பார்த்த நான் உள்ளபடியே பூரிப்படைந்தேன்.

அண்ணா நல்லவர் அவர் இருந்த காலத்தில் எதிர்க்கட்சிகளை மதித்து நடந்தார் என்று இப்போதாவது காமராஜர் ஒப்புக்கொண்டதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா நல்லவர்-எல்லாக் கட்சிக்காரர்களையும் மதித்தவர். அடாவடித்தனம் செய்யாதவர் என்றெல்லாம் தன் திருவாயை திறந்து காமராஜர் பேசுவதற்காக, நான் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் என்னைப்பலி கொடுத்திட தயாராக இருக்கிறேன் என்பதை காமராஜருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், அண்ணா உயிருடன் இருந்தபோது, இதே காமராஜர் என்ன சொன்னார்.

"அண்ணாதுரை சுட்டுவிடுவேன் என்று மிரட்டுகிறார். அதற்கெல்லாம் பயப்படமாட்டேன்" என்று அண்ணா பேசாத ஒன்றை பேசியதாக கூறவில்லையா?-காமராஜரின் அந்தப்பேச்சு பத்திரிகைகளில் வரவில்லையா?

ஒருவேளை அண்ணா உயிருடன் இருந்திருந்தால் காமராஜர் அவரைப் பாராட்டி இருக்கமாட்டாரோ என்னவோ? யார்மறைந்தாலும் அவர்கள் மறைவுக்குப் பின், அவர்களைப் பாராட்டலாம் என்று காமராஜர் எண்ணி இருக்கிறார் போலும்.

அதன்படி நான் மறைந்த பின்னர். நான் செய்த நல்ல காரியங்களுக்காக என்னை காமராஜர் பாராட்டினால் என் ஜென்மம் சாபல்யம் அடைந்துவிடும்.

## காரமோதியது சிறுவன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், திங்கள்

வீதியில் கடந்து சென்ற சிறுவன் ஒருவன் காரினால் மோதப்பட்டுவீதியில் தூக்கி எறியப்பட்டானும். ஆனால் மோதிய கார் அங்கிருந்து நிற்காமல் ஓடிவிட்டதாம்.

பலத்த காயங்களுடன் வீதியோரத்தில் கிடந்த சிறுவன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தச்சம்பவம் இருதினங்களுக்கு முன் இரவு 9 மணிக்குப் பின்னர் நடைபெற்றதாக யாழ். ஆஸ்பத்திரிப் பொலிசார் தெரிவித்தனர்.

தலையிலும் காலிலும் பலத்த காயங்களுடன் கொட்டடியைச் சேர்ந்த நவநீதன் என்ற இந்தச் சிறுவன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றான். மோதியகாரை யாழ். பொலிசார் தேடிவருகின்றனர். (கா. நி)

......

யாழ் மாவட்டக் கிளை

## க யூ. வாலிபர் சங்கநிர்வாகிகள்

உடுப்பிட்டி-புலோலி, ஞாயிறு

"கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூலம் நாம் எமது திட்டங்களைச் சாதிக்கமுடியும். வாலிபர்களின் படை ஒரே தலைமையின் கீழ்திரளவேண்டும்"

மேற்கண்டவாறு இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க சம்மேளன யாழ். மாவட்டக்கிளையின் 6-வது மகாநாட்டின் காரியக்கமிட்டிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கம்யூனிஸ்ட்வாலிப முன்னணித் தலைவர் திரு. சி. செல்லையா கூறினார், நெல்லியடிலட்சுமி தியேட்டர் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை காலைகமிட்டிமகாநாடு நடைபெற்றது

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு கே. தவஞானம் (உரும்பிராய் நகரசபை உபதலைவர்), உபதலைவர்கள்: திரு. எச், எஸ். லியனகே (யாழ்ப்பாணம்), திரு. ஆர். ஜெயகுணரத்தினம் (கம்பர்மலை), திரு. எஸ். தர்மலிங்கம் (இணுவில்) காரியதரிசி: திரு. க. குணேந்திரதாசன் (ஆனைக்கோட்டை), இணைக்காரியதரிசி திரு. கே, குமாரசாமி

## சோவியத் துணைப்பிரதமர் பீகிங் போகிறார்

மாஸ்கோ, அக். 19

சீனா சோவியத் எல்லைத் தகராறுகள் சம்பந்தமாக நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக சோவியத் உதவிப் பிரதமமந்திரிகளில் ஒருவரான திரு குஸ்னட்சோவ் சீனாவுக்கு போகிறார்.

இவர் சோவியத் தரப்பு தூதுகோஷ்டிக்குத் தலைமை வகிப்பார். சீன கோஷ்டிக்கும் துணை பிரதமர் ஒருவரே தலைமை வகிப்பார் என்று தெரிகின்றது.

சீனாவுக்கும் சோவியத்யூனியனுக்குமுடையிலான தகராறுகளை பேச்சுக்கள் மூலம் பேசித் தீர்த்துக் கொள்ள விரும்புவதாக சீனா அண்மையில் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. பேச்சுவார்த்தைகள் பீகிங்கில் இடம் பெறும்.

## "பாரதியார் கொள்கைகளை பின்பற்றி நடப்போம்"

— யாழ். உதவி மேயர்

யாழ்ப்பாணம், திங்கள்

"பாரதியாரைப் போற்றிப் புகழும் நாம் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றிநடக்கவும் வேண்டும்" என திருநெல்வேலி சைவ முன்னேற்றக்கழகம் நடாத்தியநவராத்திரிவிழாபாரதியார் அரங்கிற்குத் தலைமை தாங்கிய யாழ். உதவி முதல்வர் திரு, ஆ. துரைராசசிங்கம் கூறினார்.

"பாரதியாரின் நாட்டுப் பற்றும் தமிழ்மொழி ஆர்வமும் வறியமக்கள் படுந்துயரைக் கண்டு சகிக்கமுடியாத நிலையும் ஜாதிக்கொடுமைகளைக்கண்டு மனங்கொதிக்கும் தன்மைகளையும் அவர் பாடல் மூலமாக நாம் காணலாம்" என்றார் அவர்.

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோமென்றும் தேன்மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல்வேண்டும் என்றும், தெருக்கள் தோறும் தமிழ் முழக்கம் செய்வோம் என்றும் பாடிய பாடல்கள் அவரது தமிழ் ஆர்வத்தையும், சாதி மதங்களைப்பாரோம் உயர்ஜன்மமித் தேசத்திலெய்தினராயின் வேதியராயினு மொன்றே என்று கூறும் பாடல்கள் அவர்காணும் மனிதவர்க்க ஒருமைப்பாட்டையும் காட்டுவதாகும்." என உதவிமேயர்சொன்னார்

திரு. அ. கந்தசாமி, திருச்செல்வன் முதலியோரும் பேசினர். பொன். சுந்தரலிங்கத்தின் இசைநிகழ்ச்சியும்இடம்பெற்றது.

## 'பெண்களைத் தெய்வமாக வணங்குபவர்கள் தமிழர்கள்'

வெள்ளவத்தை, ஞாயிறு

"ஓர் இனத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு என்பன அழியாதுபோற்றிப் பாது காக்கப்பட்டால்தான் அந்த இனம் நீண்டகாலம் வாழும். எமது கலைகளான நடனம், இசை என்பனவற்றைக் கௌரவிக்கும் பொருட்டு அன்னை சரஸ்வதியின் பெயரால் விழாவெடுத்து மகிழ்கின்றோம். இதற்காக நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்"

இவ்வாறு இலங்கை தபாற்தந்திப் போக்கு வரத்துத் திணைக்கள இந்துஊழியர்கழகம் பம்பலப்பிட்டி ... மண்டபத்தில் ... யில்: "பெண்களைத் தெய்வமாக வணங்குபவர்கள் தமிழர்கள் அதுதான் சக்தி, சக்தியின் பெருமையை அளவிடமுடியாது. மனிதர்கள் எப்பொழுதும் துணிச்சல் மிக்கவர்களாகஇருக்கவேண்டும். துணிச்சல்தான் ஒருவனை வாழ்க்கையில் முன்னணிக்கு இழுத்துச்செல்லும்" என்றார்.

சங்கீதக் கலைஞன் திரு. எம். ஏ. குலசீலநாதன், திருமதி அம்பிகாதாமோதரம்ஆகியோரின்மெல்லிசைக் கச்சேரியும் திருமதி ஜெயலட்சுமி கந்தையாவின் நடனாலய நாட்டிய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும்

## விட்டும் பிரச்சனையிலேயே

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கும். ஆண்டுக்குமூன்றுவீதம் நடைபெற்று 1972ல் முடிவடையும்.

**எப்படியிருக்கும்**

அப்பல்லோ-17விண்வெளிக் கப்பலில் நிலவுக் கார் முதல் தடவையாக நிலாவுக்குக் கொண்டு செல்லப்படும். இதில் இரு விண்வெளி விமானிகள் ஐந்து கிலோமீட்டர் (மூன்றுமைல்) வரை பயணம்செய்யலாம். மணிக்கு ஐந்துமுதல் 10 கி. மீ. வேகம் பிரயாணம் செய்ய முடியும். நிலவுக் கார் 'ஜீப்' கார்போல இருக்கும். ரப்பர் டயர் போட்ட நான்கு சக்கரங்கள் உண்டு.

இடங்கள் மாறுபடும். ஆனால் நிலாத் தரையில் தங்கியிருக்கும் காலமும், செய்யும் பணிகளும் ஒரே மாதிரியானவையே. (அதாவது அப்பல்லோ-12 விமானிகள் தங்கும் காலமும் செய்யும் பணிகளும் போன்றவையே) ஐந்து விஞ்ஞானக் கருவிகள் கொண்ட ஒரு தொகுப்பை அமைப்பார்கள், இரு விமானிகள் ஒவ்வொருவரும் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் நிலாத் தரையில் நடப்பார்கள். மொத்தம் 32 நேரம் அப்புலியில் தங்கியிருப்பார்கள்.

கருவிகளும்ரடார் பொறியும்.

நிலவுக் கார், நிலாவாகனம் ஆகிய இரண்டுக்கும் இடம் அளிப்பதன் பொருட்டு, அப்பல்லோ கப்பலிலுள்ள எரிபொருள் தொட்டிகளும், பிறபொறிகளும் நெருக்கமாகப் பிணைந்து. குறைந்த இடத்துக்குள் அடக்கி வைக்கப்படும். இவ்வாறாக நாலில் ஒருபங்குஇடம் நிலவுக்கார் இருப்பதற்குக் கிடைக்கும். இந்த 'ஜீப்' காரின் சக்கரங்கள் மடித்து வைக்கப்பட்டு, அது நிலாவுக்குச் செலுத்தப் பெறும்.

# காந்தீ நூல்களைப்படிக்கும்படி அமெரிக்க மாணவர்க்கு புத்திமதி

## இந்தியாவிலுள்ள தூதர் கூறினர்

நியூயார்க், அக். 19

மகாத்மா காந்தியின் 'பரந்த கருத்துக்கள்' இன்றைய உலகுக்கு இன்றும் பொருந்துவன ஆகும்என்று இந்தியாவில் அமெரிக்கத் தூதராகப் பணியாற்றும் கென்னத் பி. கீட்டிங் இங்கு கல்லூரி மன்றம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

டவ்லிங் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் கொண்ட அந்த மன்றத்தில் தூதர் உரை நிகழ்த்தினர். கல்லூரியின் சிறப்பு அறிஞர் ஹானரி டாக்டர் ஆஃப்ஹுமேன்(லெட்டர்ஸ்) பட்டம் பெற்றபின்பு, அவர் பேசினர். அவர் கூறியதாவது:-

''அவர் (மகாத்மா) சத்யாக்ரகம் என்னும் ஒரு ஆயுதத்தை உருவாக்கினர். இது துராக்ரகத்துக்கு முற்றிலும் மாறுபட்டது. இது நட்பு - அன்பு இவற்றின் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டது. பகைவனுக்கு அருளும் பாங்கு படைத்தது.

''தன்னலமின்றி ஒரு சமுதாய இலட்சியம்ஓங்குமாறு செய்ய அது (சத்யாக்ரகம்) அசைக்க முடியாத மதிநுட்பத்தையும் அமைதி வழிகளையும் பயன்படுத்துகிறது. மற்றதோ, கடும் பகைமையில் பிறந்து பகைமையிலேயே முடிகிறது. தன்னல நோக்கம் கொண்டது.''

**காந்திக் குடிசை**

மகாத்மா காந்தியின் நூருவது பிறந்த நாள் விழாவைக் கல்லூரி ஒரு வாரம் கொண்டாடியது தூதர் கீட்டிங் உரை இந்தக் கொண்டாட்டங்களில் சிறப்பு நிகழ்ச்சியாகும். காந்தியடிகள் பற்றியதிரைப் படங்கள், கண்காட்சிகள், முதலியனவும் நடைபெற்றன. மகாத்மா பெரும்பாலும் வாழ்ந்த எளியகுடிசை போன்ற ஒரு குடிசையும் அமைத்திருந்தார்கள்

காந்திய இலக்கியங்களையும் அவரது வாழ்க்கை வரலாற்றையும் மாணவர் உலகம் படிக்குமாறு தூதர் வலியுறுத்தினர். அவரது கருத்துக்கள், ''சிந்தனைக்குரியவை; இன்றைக்கும் பொருந்துவன'' என்றார்.

''யார் அல்லது எது உங்களுக்கு ஏற்றது என்று நான் எப்படிச் சொல்ல முடியும்? காந்தியே ஏற்றவர் என நினைக்கிறேன். எனவே நீங்களே காந்தியைப் படித்து பின்பு முடிவு செய்யுங்கள் என்று சொல்வேன்'' என்றார் கீட்டிங்.

காந்தியடிகள் ''உண்மையிலேயே ஒரு பெருந் தலைவர், நாட்டின் நலனில் நாட்டம் கொண்டவர். பல நாடுகளின் நலனில் நாட்டம் கொண்டவர், உலகம் முழுதுக்கும் ஒரு மாவீரர் ஆனால் முழுக்க முழுக்க இந்தியர்'' என்று தூதர் புகழாரம்சூட்டினர்.

மக்கள் குலத்தின் பலவீனத்தை மகாத்மா உணர்ந்தார் என்று கூறிவிட்டு, கீட்டிங் மேலும் குறிப்பிட்டார். 'இதன்காரணமாக அவர் மனம் ஒடிந்து விடவில்லை. உலகைத் துறந்து விடவில்லை. உலகைத் துறந்து விடவுமில்லை. தீமைகள் பற்றி அவர் அறிவார் எனினும் அவரால் மகிழ்ச்சியோடிருக்க முடிந்தது. பலமுறை அவர் தோல்விகண்டார். எனினும் அவர் தம்மையோ பிறரையோ வெறுக்காமல் விடா முயற்சி செய்தார். வலிமை, உண்மை, அன்பு அகிம்சை இவற்றை அவர் போற்றினர்.

வாஷிங்டன் நகரில் வியாழன் வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் இந்தியா-அமெரிக்கப் பேச்சுக்களில் பங்கு கொள்வதற்காக தூதர் கீட்டிங் அமெரிக்கா வந்துள்ளார். வலுவான பொறுப் புணர்ச்சிக்காகவும் இன்றுள்ளதைவிட மேலும் பண்புள்ள ஒரு சமுதாய அமைப்புக்குத் தொண்டுகள் ஆற்றி வருவதற்காகவும் அவருக்குச் சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றது.

தமது முப்பதாண்டுக் காலப் பொதுப்பணியில்கீட்டிங், யு. எஸ். பிரதிநிதிகள் சபை உறுப்பினராகவும், செனட்சபை உறுப்பினராகவும், சட்டஇயல் அறிஞராகவும் தூதராகவும்தொண்டு புரிந்துள்ளது பற்றிப் பாராட்டு இதழ் குறிப்பிடுகிறது.

## மின்சார திணைக்களத்தில் சரஸ்வதிபூஜை

கோட்டை, ஞாயிறு

மின்சார திணைக்கள சைவ ஊழியர் சங்கத்தினரால் இம்மாதம் 17-ம்திகதி சரஸ்வதி பூசை வெகு விமரிசையாக மின்சாரத்திணைக்களத்தில் கொண்டாடப்பட்டது.

இவ் வைபவத்தில் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு ம. ஸ்ரீகாந்தா சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

முதற்தடவையாக மின்சாரதிணைக்கள சைவ ஊழியர் நடாத்தும் இச் சரஸ்வதிபூஜை விழாவில் வாத்தியக்கச்சேரிகளும் இசைக்கச்சேரிகளும் இடம் பெற்றன.

இதைப் படித்துப் பார்த்த நான் உள்ளபடியே பூரிப்படைந்தேன்.

அண்ணா நல்லவர் அவர் இருந்த காலத்தில் எதிர்க்கட்சிகளை மதித்து நடந்தார் என்று இப்போதாவது காமராஜர் ஒப்புக்கொண்டதற்கு இருக்கிறார் போலும்.

அதன்படி நான் மறைந்த பின்னர். நான் செய்த நல்ல காரியங்களுக்காக என்னை காமராஜர் பாராட்டினால் என் ஜென்மம் சாபல்யம் அடைந்துவிடும்.

# வியட்னும் பிரச்னையிலேயே அதிகநேரம் கழிகிறதாம்

## அதிபர் நிக்ஸன் கூறுகிருர்

வாஷிங்டன், அக். 18

வியட்னுமில் 'அமைதி காணும் பாதையிலேயே நாம் செல்கிறோம்' என்று அதிபர் நிக்ஸன் கூறினர். அந்தப் பாதை எளிதுமல்ல, அதில் செல்வது இலகுவானதுமல்ல என்ருலும், அதுதான் சரியான வழி என்று திடமாக உணர்கிறேன்' என்றார் நிக்ஸன்.

தாம் பதவி ஏற்றதும் தமது ஆட்சிமேற்கொண்ட முதல் முயற்சிகளில் ஒன்று, வியட்னும் கொள்கை முழுவதையும் ஒன்றுவிடாமல் அலசி ஆராய்ந்ததாகும் என்று அதிபர் நிக்ஸன் குறிப்பிட்டார்,

'வேறு எந்தப் பிரச்னையும் என் நேரத்தையும் சிந்தனையையும் இவ்வளவு தூரம் இழுத்ததில்லை. எட்டு ஆண்டுகளாக வளர்ந்துவந்துள்ள இந்தப் பூசலுக்கு ஒரு நியாயமான முடிவு காண்பதற்கு நாங்கள் ஒன்பது மாதங்களாக ஒவ்வொரு நாளும் பாடுபட்டுள்ளோம்' என்றார் நிக்ஸன்

ராண்டி ஜே டிக்ஸ் என்ற ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு அதிபர் நிக்ஸன் எழுதிய பதில் கடிதத்தில் இவ்வாறு கூறியுள்ளார்

அக்டோபர் 15-ம் தேதி புதன்கிழமையன்று சமாதான ஆர்ப்பாட்டம் ஒன்று நடக்கப் போவது குறித்து மாணவர் டிக்ஸ் அதிபருக்கு எழுதிய கடிதத்துக்குப் பதில் இது

'என்ன ஆர்ப்பாட்டங்கள் நடந்தாலும் 'நான் எந்தச் சூழ்நிலையிலும் மாற மாட்டேன்' என்று செய்தி நிருபர்களின் மகாநாட்டில் அதிபர் நிக்ஸன் கூறிய கருத்தை மறு பரிசீலனை செய்யும்படி டிக்ஸ் கேட்டிருந்தார்.

வியட்னுமில் எவ்வாறு சமாதானம் காணலாம் என்பது குறித்து 'நாம் சிறந்த முடிவின்படியே' தமது கொள்கை அமைந்திருப்பதாக நிக்ஸன் தமது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

'ஆய்ந்து தெளிந்த இந்த வழியை வெறுமனே ஒரு பொது ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டுக் கைவிட்டால், அது நான் செய்யும் ஒரு பெரிய பொறுப்பற்ற செயலாகவே போகும்' என்று நிக்ஸன் தம் கடிதத்தில் கூறுகிருர்.

'விவகாரம் எதுவானாலும் அரசின் கொள்கையைத் தெருவிலே உருவாக்க விடுவது ஜனநாயக வழிமுறையை அழித்துவிடும்' என்றார் நிக்ஸன்.

## பிரி. கார் உற்பத்தி

லண்டன், அக். 19

பிரிட்டிஷ் மோட்டார் தொழிற்துறை தனதுமொத்தக்கார்உற்பத்தியில் அரைப் பங்கை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. மேற்குறிப்பிட்ட தகவலை சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற சர்வதேச மோட்டார் காட்சியை திறந்துவைத்த சமயம், இங்கிலாந்து வங்கியின் கவனரான ஸேர் லெஸ்லி ஒபிரென் தெரிவித்தார்.

இவ்வருடத்தில் முதல் எட்டு மாதங்களில் மட்டும் பிரிட்டன் 429,000,000 பவுன்கள் பெறுமதியான 755,000வாகனங்களை ஏற்றுமதி செய்திருப்பதாக மோட்டார் உற்பத்தியாளர் சங்கம் கூறுகிறது. கடந்த வருடத்தில் இதே காலத்தில் பிரிட்டன், ஏற்றுமதி செய்த தொகையிலும் பார்க்க இத்தொகை 29 விகிதத்தால் கூடியது.

முழுமையானவாகனங்களை விட 285,000,000பவுன்கள் பெறுமதியான மோட்டார் இணை கருவிகளையும், உதிரிப் பாகங்களையும் இத்தொழிற்துறை ஏற்றுமதி செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## விசேஷபயிற்சி திட்டம்

கோட்டை, ஞாயிறு

வேலையில்லாதிருக்கும் வளர்ந்தோர்களுக்கு விசேஷ பயிற்சி ஒன்றை நடாத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. தொழில் அமைச்சர் திரு. எம். ஏச். முகமத் இத்திட்டத்தைச் சமர்ப்பித்திருந்தார். இந்தப் பயிற்சித்திட்டத்தை நடாத்த திரு. ஏச். பிளட்ஸர் என்ற வெளிநாட்டு நிபுணர் ஒருவர் இங்கு வந்துள்ளார்.

தலைவர்: திரு கே. தவஞானம் (உரும்பிராய் நகரசபை உபதலைவர்), உபதலைவர்கள்: திரு. எச், எஸ். லியனகே (யாழ்ப்பாணம்), திரு. ஆர். ஜெயகுணரத்தினம் (கம்பர்மலை), திரு. எஸ். தர்மலிங்கம் (இணுவில்) காரியதரிசி: திரு. க. குணேந்திரதாசன் (ஆனைக்கோட்டை), இணைக்காரியதரிசி திரு. கே, குமாரசாமி (நல்லூர்), பொருளாளர்: திரு. எஸ். குணசிங்கம் (மானிப்பாய் நகரசபை உறுப்பினர்), அமைப்பாளர்: திரு. ப. ஜீவானந்தம்.

நாற்பது பேரடங்கிய நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

......

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலய பெற்றார் தினவிழாவும், சரஸ்வதி பூசையும்இன்றுமாலை 4மணிக்கு பள்ளிக்கூட மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன. சுகாதாரப்பரிசோதகர் திரு. நா. செல்லப்பா தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் சொற்பொழிவுகளும், மாணவர்களின் 'சிலம்புச்செல்வி' என்றநாடகமும், நுணுவில் பத்மநாதன் குழுவினரின் வில்லுப்பாட்டும் இடம் பெறுகின்றன,

0 0 0

சுழிபுரம், ஞாயிறு

சுன்ஞகம் தெற்கு சனசமூக நிலையத்தில் நவராத்திரி விழாசிறப்பாகக்கொண்டாடப் பட்டது. பட்டிமன்ற நிகழ்ச்சிகளை வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு அமிர்தலிங்கம் ஆரம்பித்து வைத்தார், திரு இ. அப்பாத்துரை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கல்வியா, செல்வமா, வீரமா என்னும் பொருள்பற்றிஆய்வுரையும் நிகழ்த்தப்பட்டது.

0 0 0

**கருகம்பனையில்**

கருகம்பனை, திங்கள்

கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலையத்தில் இம்மாதம் 12-ம் திகதி முதல் நவராத்திரிவிழா நடைபெற்று வருகிறது. இறுதி நாளான இன்று விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும். மாலை 5 மணிக்கு சைவப் புலவர் திரு. பொன். தெய்வேந்திரம் சக்தியின் சித்தி என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

வாழும். எமது கலைகளான நடனம், இசை என்பனவற்றைக் கௌரவிக்கும் பொருட்டு அன்னை சரஸ்வதியின் பெயரால் விழாவெடுத்து மகிழ்கின்றோம். இதற்காக நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்''

இவ்வாறு இலங்கை தபாற்தந்திப் போக்கு வரத்துத் திணைக்கள இந்துஊழியர்கழகம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய சரஸ்வதிபூசை விழாவில் இந்து ஊழியர் கழகத் தலைவரும் தொலைபேசி உப அத்தியட்சகருமான திரு. எஸ். ஆறுமுகம் கூறினர்

திருமதிமகேஸ்வரி பாலகிருஷ்ணன் 'நவராத்திரி மகிமை' பற்றிப் பேசுகை மிக்கவர்களாகஇருக்கவேண்டும். துணிச்சல்தான் ஒருவனை வாழ்க்கையில் முன்னணிக்கு இழுத்துச்செல்லும்'' என்றார்.

சங்கீதக் கலைஞன் திரு. எம். ஏ. குலசீலநாதன், திருமதி அம்பிகாதாமோதரம்ஆகியோரின்மெல்லிசைக் கச்சேரியும் திருமதி ஜெயலட்சுமி கந்தையாவின் நடனலய நாட்டிய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. மண்டபத்தில் குழுமியிருந்த திரளான மக்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கப்பட்டன.

ஆரம்பத்தில் திரு. தி. மாணிக்கவாசகர் சகலகலாவல்லி மாலை பாடினர்.

# 'பெற்றோர்கள் கூடிய அக்கறைசெலுத்தவேண்டும்'

## — வட்டு. எம். பி.

சுழிபுரம் ஞாயிறு

''திருவிழாக்களுக்கும், வாண வேடிக்கைகளுக்கும் பல நூறு ரூபாய்களை செலவு செய்யும் நம்மவர்கள் கல்விப் பணிக்காக ஒரு நூறு ரூபாயைத் தானும் செலவு செய்யத் தயங்குகிருர்கள். தமது பிள்ளைகளை கல்வி கற்பதற்காக பாடசாலைகள், கல்லூரிகள் யாவற்றுக்கும் போட்டி போட்டு பலருடைய சிபார்சுடன் அனுமதிக்கப்பட்ட பிள்ளைகள் விடயத்தில் தாம் கவனம் செலுத்தாது ஆசிரியர்களே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென பெற்ருர்கள் எண்ணுகின்றனர். பெற்றோர்கள் கல்லூரியின் குறை நிறைகளை சுட்டிக் காட்டுவதுடன் மேலதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஒரு சில மணி நேரம் கல்லூரியிலும் அதிகமான நேரம் பெற்ருருடனும் வாழும் பிள்ளைகளை வளமாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிலும் பார்க்க பெற்றோர்களுக்கே கூடுதலாகும்.

இவ்வாறு சுழிபுரம் விக்டோறியாக்கல்லூரி பெற்ருர்-ஆசிரியர் சங்க பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு அதிபர் என். சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார். திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், பெற்ருர்-ஆசிரியர் சங்கம் பெயரளவில் மட்டும் இயங்காமல் ஆக்கபூர்வமாக பல கருமங்களை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கல்லூரிஅதிபர் எஸ். சிவசுப்ரமணியமும் பேசினர்.

## சாவகச்சேரி பஸ்நிலையம் சீரமைப்பு

மட்டுவில், திங்கள்

சாவகச்சேரி பஸ் நிலைய சீரமைப்பு வேலைகள் ஆரம்பமாகவுள்ளன, விரைவில் பிரயாணிகள் தங்கும் நிலையங்களும், கியூவரிசைகளும் அமைப்பதற்கான ஆக்க வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்னும் ஓரிரு மாதங்களில், இந்த வேலைகள் பூர்த்தியானதும், பஸ் ஒரே பாதை போக்குவரத்து முறைகளைக் கையாளவிருப்பதாகவும், யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பஸ், புகையிரதநிலையவீதியால் திரும்பி மீன் சந்தைப் பக்கமாக வந்து பஸ்நிலையத்தையடைந்து பிரயாணிகளை ஏற்றிய தன்பின்கண்டிவீதிவழியாகச் செல்லும் என்றும், கொடிகாமப் பக்கத்தால் வரும் பஸ் தனங்கிளப்பு வீதியால் திரும்பி, புகையிரதவீதி அருகாமையால் வந்து பஸ்நிலையத்தை அடையும் என்றும் பிரயாணிகளை ஏற்றியதன் பின், கண்டி வீதிவழியாகவே புறப்பட்டுச்செல்லும் என்றும், இதற்கான ஒழுங்குகளைத் தாம் செய்திருப்பதாகவும் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் தெரிவித்தார். இதுபிரயாணிகளுக்கு சௌகரியத்தை அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எல்லையற்ற பொறுமையும் மற்றவர்களிடம் அளவற்ற நம்பிக்கையும் வேண்டிய அளவுக்கு தன்னம்பிக்கையும் சத்தியாக்கிரகவாதிகளுக்கு உள்ளன.

— மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 4-ந் திகதி (20-10-69)

# சிறுபான்மைத் தமிழரும் பார்லிமெண்ட் பிரதிநிதித்துவமும்

நம் சமூகத்திலே சிறுபான்மைத் தமிழர் அல்லது அரிசனங்கள் என்று கூறப்படும் பகுதியினரின் நிலைமை மிகப் பெரிய தேசிய முக்கியம் வாய்ந்த பிரச்னையாகும். சமூகம், பொருளாதாரம், சமயம் முதலிய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் பெரிதும் பாதிக்கக்கூடியதென் பதை மறக்கமுடியாது. சமூகத்தின் இப்பகுதியினருடைய நிலைமையைப் பற்றி தீவிரமாகக் கவனித்து அதை அபிவிருத்திசெய்யவும் உடன் கஷ்டநிவாரணம் அளிக்கவும்வேண்டியதாகும். மற்றப் பிரச்னைகளைவிட இது அவசரமானது. இந்தப் பிரச்னை தமிழர்களுக்குத்தான் அதுவும் மற்ற இடங்களைவிட யாழ்ப்பாணத்திலே இந்துக்களிடையில்தான் அதிகக் கடுமையாக இருக்கிறதென்பது பொதுவான கருத்து.

அரிசன மக்களின் நிலைமையை படிப்படியாகவும் பயனுள்ளமுறையிலும் மேம்படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கையில் ஒன்று அவர்களுக்கு செனட் சபையிலும் ஜனப்பிரதிநிதி சபையிலும் போதிய பிரதிநிதித்துவம் அளிப்பதாகும். அரிசனமக்களுக்கு இந்தப் பிரதிநிதித்துவத்தை அளிப்பது அரசியல் கட்சிகளுக்கோ அரசாங்கத்துக்கோ முடியாத காரியமல்ல. மனமுண்டானல் நிச்சயம் வழியுண்டு. நமது அரசியல் தலைவர்களும் கட்சிகளும், அரசாங்கமும், ஜனப்பிரதிநிதிசபைக்கும், செனட்சபைக்கும் அரிசன சமூகத்திலிருந்து தக்கவர்களை தெரிவுசெய்யவும் நியமிக்கவும் வேண்டுமென்று மனஉறுதிபூண்டால், இதற்கான முறையில் இச் சமூகத்தின் முன்னேற்றத்துக்கான வழியில் ஆரம்ப நடவடிக்கை எடுக்கமுடியும்; எடுக்க வேண்டும்.

பார்லிமெண்ட் சபையிலே இவ்விஷயத்தில் பொதுமக்கள் ஊக்கம் காட்டி, பெரிதும் விரும்பத்தக்க இந்தக் காரியத்தை நிறைவேற்றுவரென்றே மனப்பூர்வமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் மற்றொரு முக்கிய விஷயத்தை கவனிக்க வேண்டுகிறோம். அரிசன சமூகத்திலுள்ள இந்துப் பகுதியினரே அதிக சங்கடப் படுகின்றனர். இதைப்பற்றி கருத்துவேற்றுமை இருக்க முடியாது. இதற்கான காரணங்களைப் பற்றி ஆராயத் தேவையில்லை. அதனால் பயனுமில்லை. இந்தத் தீமையை நீக்க அரிசன இந்துக்களுக்கு பார்லிமெண்ட்சபையிலே இடம் அளிப்பதால் பயனேற்படுவதுடன், நிலைமை சீராகவும் மற்றவர்களைவிட அவர்களால் முடிவதாகவுமிருக்கும். இந்த யோசனையைக் கூறுகையில், சமயவேற்றுமைகளைக்கிளப்பிவிடவேண்டுமென்ற எண்ணம் நமக்குச் சிறிதுமில்லை. சமூகத்திலுள்ள சிக்கலான உண்மை நிலைமையைக் கருதி இன்றுள்ள தீமையைத் தீர்க்க இது ஒரு மேலான வழி என்றே இவ்விதம் கூறுகின்றோம்.

தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ்கட்சி முதலிய கட்சிகளும், சில ஸ்தாபனங்களும் இவ் விஷயத்தில் ஊக்கமெடுத்து முயற்சிப்பதைக் காண மகிழ்ச்சியடைகிறோம். அரசாங்கமும் எல்லா அரசியல்கட்சிகளும் தங்கள் செல்வாக்கையும் ஆதரவையும் நல்கி இலங்கையின் சனப்பிரதிநிதிசபையிலும், செனட்சபையிலும் அரிசனங்களுக்கு இனியும் சுணங்காமல் பிரதிநிதித்துவம் கிடைக்குமாறு செய்வரென்றே நம்புகின்றோம்.

நாம் ஏற்கவேன இப்பத்திகளில் குறிப்பிட்டது போல், இந்தச் சரியான

# அன்னிய படையெடுப்பைவிட ஆபத்தானது ஜனப்பெருக்கம்

**— ஜயப்பிரகாஷ் நாராயண் —**

சர்வோதயத் தலைவர் திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் இக் கட்டுரையில் கட்டுப்பாடின்றி நாட்டு மக்கள் தொகை அதிகரித்து வருவதிலுள்ள ஆபத்தை விளக்குவதுடன் அவ்வாபத்தை தவிர்ப்பதற்கு ஒரு கோரிக்கையும் விடுத்துள்ளார் அவரது கருத்துக்கள் நமது நாட்டிற்கும் பொருந்துமாகையில் இககட்டுரை இங்கு பிரசுரிக்கப் படுகிறது,

'மக்கள் தொகைப் பெருக்க'மென்று நம் நாட்டில் அழைக்கப்படும் தீமைபற்றி நான் மிகவும் கவலைகொண்டுள்ளேன். 50 கோடி என்ற எண்ணிக்கையை நாம் ஏற்கனவே தாண்டிவிட்டோம். இந்த அபாய அறிவிப்பை நாம் கவனிக்காதுஇருப்போமானல் நமக்குத்தான் கெடுதல் நேருமென்று டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்

நமது பிரதமர் கூறியுள்ளதுபோல் இத்தகையபயங்கரமான மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு நடுவேநாட்டின் நலனுக்காகத்திட்டமிடுவதென்பது, வெள்ளத்தால் எப்போதும் பாதிக்கப்படும் தரைமீது வீடு கட்டுவது போலாகும், மணலின் மீது வீடுகட்டுவது போலாகும் என்றுநான் கூறுவேன். திட்டங்களின் மூலமாகவும், விவசாயம் மற்றும் தொழில் துறைகளின் வளர்ச்சி மூலமாகவும் ஏற்படும் ஆதயமெல்லாம் மக்கள்தொகைப் பெருக்கத்தால் விரயமாகிவிடுகிறது. இதன் விளைவாகத் தான் மக்களில் பெரும்பான்மையோருடைய வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிடத்தக்க உயர்வு எதுவுமில்லை நம் நாட்டிலுள்ள சமுதாய அமைப்பின் அடிவாரங்களில் வாழ்க்கைத் தரம்முன்பிருந்ததைவிட மோசமாக இருக்கிறதென்றும் நான் அச்சமுறுகிறேன்.

பல விதங்களிலும் இந்தப் பிரச்னை நமக்கு நேரவிருக்கும் மற்றெந்தி விதமான ஆபத்தையும் அபாயத்தையும்விட மோசமானதாகும். அந்நியபடையெடுப்பை விட இதுஆபத்துநிறைந்தது அந்நியர்கள் நடப்மீது படை எடுக்கும்போது நாம் நமது வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து ஒன்றுபடுகிறோம் ஒரு புதிய உற்சாகத்தோடும், உத்வேகத்தோடும், உறுதியோடும் எதிரியை முறியடிக்கிறோம். ஆனல் பிரம்மாண்டமான எண்ணிக்கையில் பாய்த்து வளர்ந்து நன்மை விழுங்கக் காத்திருக்கும் மக்கள் தொகைப் பெருக்கமெனும் பேராபத்து, இன்னும் மக்கள்கவனத்தைக்கவராமலே இருக்கிறது.

ஒரு குடும்பத்தைச் சேர்

தொகையைச் சற்று நினைத்துப் பாருங்கள்

'கடவுள்தான் நம்மைப் படைத்திருக்கிறார் அவரே நமக்கு உணவையும் அளிப்பார்' என்று கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்கள் சொல்கிறார்கள் ஆனல் அவர் அப்படிச்செய்து வருவதாகத்தோன்றவில்லை எப்படியிருப்பினும், கடவுளை நம்புகிறவர்கள் அதே கடவுள் அவர்களுக்கு அளித்துள்ள விவேகத்தை உபயோகிக்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை.

நீதிநெறிகள் மற்றும் மத சம்பந்தமான காரணங்களுக்காகவோ. அல்லதுவேறெந்த காரணத்திற்காகவோ, இந்திய அரசாங்கத்தில் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை எதிர்ப்பவர்கள் இப்போதாவது மனதை மாற்றிக் கொள்ளவேண்டும் அதிர்ஷ்டவசமாக ஜதி, மதம், மொழி பேதமின்றி மக்களில் பெரும்பாலோர் இந்தத்திட்டத்தை ஆதரிக்கவே செய்கிறார்களென்பதை நான்என் சொந்த அனுபவத்தில் கண்டிருக்கிறேன் அவர்களுக்கு விவரங்கள் மட்டுமே தெரியவில்லை பீஹார் வறட்சியின் போது, வடகிழக்கு ரெயில்வேயினர் மிகவும் பின்தங்கியதொரு பகுதியில் திறந்திருந்த மருத்துவ நிவாரண நிலையத்திற்குப் பெண்கள் வெகு தொலைவிலிருந்தெல்லாம் தாமாகவேவந்து குழந்தைகள் பிறப்பதைத் தடுக்க முடியுமா என்று விசாரித்துச் சென்றார்கள்

பெண்கள் வணங்கப்படும் நாட்டில்தான் கடவுள் வசிக்கிறாரென்று ஒரு சமஸ்கிருதச் செய்யுள் கூறுகிறது. நம் நாட்டிலுள்ள பெண்களின் நிலையை நாம் அறிவோம்.

அன்னை, மனைவி, சமையற்காரி, துணிதுவைப்பவள், வீட்டை பெருக்குபவள். வேலைக்காரி ஆகிய எல்லாமாகவும் நமது பெண்கள் செயலாற்றவேண்டியுள்ளது அவர்கட்கு உதவிபுரிய ஆண்கள்முன்வருவதில்லை. மேலும் மேலும் அவர்கள் தம்மனைவிமார்களின் விருப்பத்திற்கு மாறாகக்கூட குழந்தைகளை மட்டும் உற்பத்திசெய்துகொண்டே இருக்கிறார்கள் இனியும் தாங்கமுடியாதென்னும் அளவிற்கு உடல்நலம் குலைந்துபோன பெண்மணிகள் மேலும் தொல்லைக்கு ஆளாகிறார்கள்.

கருத்தடை நடவடிக்கையினல் இந்தியப் பெண்களுக்கு நல்லகாலம் பிறக்குமென்று கூறப்படுகிறது. நான் அதை ஆமோதிக்கிறேன். குடும்பம், பாசம், இல்லறம், தாய்மை என்றவாறு வெறும் அடிமைவாழ்க்கை வாழாமல், பெண்களுக்குக் குடுப்பக்கட்டுப்பாடு திட்டத்தின்மூலம் நல்ல உடல் நலனும், சுயமரியாதையும், ஓய்வும்கிட்டும் ஆகவேதான் நான் இந்தத்திட்டத்திற்கு என் முழுஆதரவையும் அளிக்கிறேன்,



# ஐயாறன் எழுதுவது

விபுலானந்த அடிகளாரின் உருவச்சிலை நாட்டுவிழாவுக்காக மட்டக்களப்புக்குச் சென்றிருந்த அன்பர் அம்பிகைபாகன், அங்கு இராமகிருஷ்ணமிஷனின் ஆதரவில் ஏழை மாணவரில்லங்கள் மிக நல்ல முறையில் நடைபெறுவதாகப் பாராட்டிச் சொன்னர்.

அந்த இல்லங்களின் அதிபர் சுவாமி ஜீவனநந்தா வெளியிட்டுள்ள ஒரு வேண்டுகோளில் கூறுவதாவது.

இறைவன் திருவருளை முன்னிட்டு மட்டக்களப்பு, கல்லடி உப்போடை, காரைதீவு என்னும் இடங்களில் இராமகிருஷ்ணமிஷனல் நிறுவப் பெற்றிருக்கும் ஏழை மாணவரில்லங்கள், தங்கள் முப்பத்தொன்பதாவது ஆண்டு சேவையை திருப்திகரமாகச் செய்து முடித்திருக்கின்றன இந்த இல்லங்களிலே இப்போது 115 ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசமாக உணவு, உடை, கல்வி, வைத்திய வசதி ஆதியன அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களுள் 50 பேர் பெண்களாவர்.

அன்றாட வாழ்க்கைச் செலவு உயர்ந்துபோவதால் இந்த இல்லங்களைத் திருப்திகரமாக நடத்துவது அதிக கஷ்டமாக இருக்கிறது ஆகையால் இவ்வரும் பணியைத் தொடர்ந்து செய்வதற்குத் தங்களுடைய தாராள உதவியை எதிர்பார்க்கின்றோம். இந்த உதவி பணமாக மட்டுமின்றி பொருளுதவியாகவு மிருக்கலாம். நன்கொடை எவ்வளவு சிறிதாயிருப்பினும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.''

இந்த இல்லங்களை நடத்துவதில் இதுவரை, கல்லடி உப்போடையிலுள்ள ஆண்கள் அனதை இல்லத்துக்கு 6 ஆயிரத்துக்கு மேலும் ஆனைப்பந்தி பெண்கள் அனதை இல்லத்துக்கு 8ஆயிரத்துக்கு மேலும், காரைதீவு பெண்கள் அனதை இல்லத்துக்கு சுமார் 5 ஆயிரம்வரையிலும் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது

இந்த இல்லங்களுக்கு இங்குள்ள அன்பர்கள் தாராளமாக உதவிசெய்ய முன்வந்து அக்குழந்தைகளின் கஷ்டங்களைத் தீர்ப்பரென்றே நம்புகிறேன். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தம் பிள்ளை தானே வளரும்.

வினர்கள், இவர்கள் எல்லோரும் தெய்வங்களே யல்லவா! ஏன் முதலில் இவர்களை ஆதரிக்கக்கூடாது? கங்கைக் கரையில் கிணறு வெட்டப் போதல் உண்டா? இந்த ஏழைகளுக்குச் செய்யும் பணியையே கடவுள் பணியாகக் கொள்ளுங்கள்.

எவனுடைய இதயம்ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன்.

0 0 0

மாயத்தை அறிய மாட்டேன் மையல்கொள் மனத்தனகிப், பேயொத்துக் கூகையானேன் பிஞ்ஞகா பிறப்பொன்றில்லீ, நேயத்தால் நினையமாட்டேன் நீதனேன் நீசனேனன், காயத்தைக் கழிக்க மாட்டேன் கடவூர் வீரட்டனீரே.

—அப்பர் அடிகளார்.

## எதிர்ப்பு

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சிக் காரியாதிகாரி பிரிவு இரண்டாகப் பிரிககப்படுவதற்குப் பருத்தித்துறை நகரசபை உபதலைவரும், முதலாம் வட்டார உறுப்பினருமான திரு. வே. நாகநாதன் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபையின் 1-ம், 9-ம் வட்டாரங்கள் உடுப்பிட்டித்தொகுதிக் காரியாதிகாரி கந்தோருடன் இணைக்கப்பட்டிருப்பதாலும் இதனைத் தடுத்துப் பருத்தித்துறைக் காரியாதிகாரி கந்தோருடனன தொடர்பு என்றும் நிலைத்திருக்க நடவதுக்கை எடுப்பது அவசியமெனவும் அவர் கூறினர்

## 'இணைந்து செயலாற்றினல்.'

முல்லைத்தீவு, ஞாயிறு

''பத்திரிகைநிருபர்களும், பொலிசாரும் ஒன்றுபட்டு சேவைசெய்வதின் மூலம் அதிகநன்மையடையலாம்'' என முல்லைத்தீவுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த வட பிராந்திய உதவிப் பொலிஸ் அதிபர் திரு எம். பீ டெடிகம கூறினர்

முல்லைத்தீவு பட்டினசபை வாசலில் வைத்து பட்டினசபைத்தலைவர் திரு வஸ்தியாம்பிள்ளை அவரை வரவேற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கவும் வேண்டுமென்று மனஉறுதிபூண்டால், இதற்கான முறையில் இச் சமூகத்தின் முன்னேற்றத்துக்கான வழியில் ஆரம்ப நடவடிக்கை எடுக்கமுடியும்; எடுக்க வேண்டும்.

பார்லிமெண்ட் சபையிலே பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய தகுதிவாய்ந்தவர்கள் அரிசன சமூகத்தில் இல்லை என்றுகருதமுடியாது. அச் சமூகத்திலுள்ள தக்கவர்களை நியமிப்பதால், அச்சமூகம் முன்னேறுவதுடன், இலங்கையில் சமூக சமரசமும், ஒத்துழைப்பும் தேசிய ஒற்றுமையும் ஏற்பட்டு, பொதுவாக இலங்கையிலே தேசிய வாழ்வு சிறப்படையவும் வழி செய்யும். இலங்கை பார்லிமெண்ட் சபையிலே அரிசனங்களின் பிரதிநிதித்துவத்தைப் பற்றி வெகு காலத்துக்குமுன்பாக தீர்மானித்திருக்க வேண்டும். இதுமிகவும் அவசரமாகத் தீர்மானிக்கவேண்டியதொன்றாகும், ஆகவே அரசியல் வேற்றுமைகளைப் பாராமல், அரிசனங்களுக்கு இனியும் சுணங்காமல் பிரதிநிதித்துவம் கிடைக்குமாறு செய்வரென்றே நம்புகின்றோம்.

நாம் ஏற்கவேன இப் பத்திகளில் குறிப்பிட்டது போல், இந்தச் சரியான காரியத்தைச் செய்ய இது அரியதோர் சந்தர்ப்பமாகும் இலங்கை செனட்சபைக்குப் பத்துப்பேர்களைத் தேர்தல் மூலமும் நியமனமூலமும் அனுப்பிவைக்க வேண்டிய சமயம் இது. இச்சந்தர்ப்பத்தை இழப்பதாயின் இது போல் மற்றொரு வாய்ப்பு சமீபத்தில் கிடைப்பது சுலபமன்று. ஆகவே பொது மக்களும் நமது தலைவர்களும் இச்சமயத்தில் கூட்டாகச்சேர்ந்து, மிக முக்கியமான இத் தேசீயக் கடமையைச் செய்வதால், நாட்டுக்கே நல்லகாலம் பிறப்பதாக இருக்கும். தலைவர்களோ, அரசாங்கமோ இவ் விஷயத்தில் எவ்வித தோல்வியும் அடைவதற்குத் தக்க காரணம் எதுவுமில்லை

எண்ணிக்கையில் பாய்த்து வளர்ந்து நன்மை விழுங்கக் காத்திருக்கும் மக்கள் தொகைப் பெருக்கமெனும் போராபத்து, இன்னும் மக்கள்கவனத்தைக்கவராமலே இருக்கிறது.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் நிர்வாணமாகவும், பசித்தும் திரிந்தால் கூட அதைக் கெடுதலென்று கருதி, அந்தக் குடும்பத்துக்கு உதவிபுரிய முன்வருவதில் உதாரணமாக, ஓர் அந்நியர் படையெடுப்பின்போது ஏற்படும் ஒன்றுமையுணர்வோ அல்லது இரக்க மனப்பான்மையோ இதுபோன்ற குழந்தைகளைப் பார்க்கும்போது ஏற்படுவதில்லை ஆயினும், இன்னும் ஒரு சில வருடங்களில் மக்கள் தொகைப்பெருக்கம் குறையாது இருக்குமானால், கடவுள் ஒருவர் மட்டுமே நம்மைக்கர்ப்பாற்றக் கூடியதொரு சூழ்நிலை நமது நாட்டில் ஏற்பட்டுவிடும் 100 கோடி எனும் மக்கள்


## செனட்சபை

இலங்கையின் செனட் சபைக்குத் தேர்தலும் நியமனங்களும் சமீப காலத்தில் நடைபெறவிருக்கின்றன. காலியாகியுள்ள பத்து இடங்களில் ஐந்தைமக்கள் ஆட்சி மன்றம் தேர்தல் மூலம் தெரிவுசெய்யும். மற்ற ஐந்தை கவர்னர் ஜெனரல் நியமிப்பார். இவ்விஷயத்தில் கவர்னர்ஜெனரல் பொதுவாகப் பிரதம மந்திரியின் யோசனை மீதே காரியம் செய்வதாக இருக்கும். பிரதமர் தமது கட்சி நன்மை, முதலிய பல விஷயங்களையும் யோசித்தே தக்க பெயர்களைச் சிபார்சு செய்யக் கூடும். அரசாங்கத்துக்கு மாறாக உள்ளவர்களின் பெயர்களை அவர் சிபார்சு செய்வாரென எதிர்பார்க்கமுடியாது. அவரது கட்சியின் கொள்கைகளை ஆதரிப்பதாக ஏற்கனவே உறுதி கூறியவர்களையே அல்லது ஆதரிக்கக்கூடியவர்களையேதான் அவர் சிபார்சு செய்வது இயற்கை.

செனட்சபையின் அதிகாரம் ஆட்சிமன்றத்தினுடையதைவிடக் குறைவே என்றாலும் இலங்கை அரசியலில் இச்சபை முக்கியமான ஸ்தானத்தை வகிக்கின்றது. அதன் அதிகாரம் சட்டதிட்டங்களைத் தவக்கம் செய்வதுதான். மக்கள் ஆட்சிமன்றம் நிறைவேற்றிய சட்டங்களை, சில காலத்துக்கு அது நிறுத்திவைக்க முடியும். செனட் சபைக்குத் தெரிவுசெய்யும் முறை அவ்வளவு திருப்தியானதல்ல. அச்சபைக்குத் தெரிவுசெய்யப்படும் அங்கத்தவர்களின் தகுதிகள் அதிக மேலாக இருக்க முடியும். என்றாலும் கூட செனட்சபை பயனுள்ள ஒரு ஸ்தாபனம். அதை அபிவிருத்திசெய்தால் பெரிய தேசீய சேவைக்கு அது மிகவும் பயன்படுவதாக இருக்கும்.

இவ்வித இரு குறைகள் இப்போதுள்ள சபைக்கு இருந்தாலும் நல்ல அனுபவமும் திறமையும் தேசத்துக்கு நீண்ட சேவை செய்தும், அறிவாற்றலும்நிறைந்த சிலர் அதில் இருக்கவே செய்கின்றனர் பதவி முடிந்து விலகும் அங்கத்தவர்களில்செனட் சபைத் தலைவர் செனட்டர் இரத்திஞயகாவும் ஒருவர் இப்பெரிய பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படுமுன் அவா ஓர் அரசியல் தலைவராகவும் அரசாங்கசபைஅங்கத்தவராகவும் அமைச்சராகவும் நாட்டுக்கு நற்பணி புரிந்திருக்கிறார். நாட்டுக்காகப் பல்லாண்டுகள் சமூக, சமய, கலாசார பொருளாதார கல்வி அபிவிருத்திக்கான துறைகளில் பெரிதும் உழைத்துள்ளார். பல துறைகளிலும் பணியாற்றிச் சிறந்த அனுபவம் பெற்றவர். நிதான புத்தியும், சுதந்திர நோக்கும், பொறுமையும், பார்லிமெண்ட் அனுபவமும், சமயோசிதபுத்தியும், தேசாபிமானமும் அவரது சிறந்த குணங்களில் சிலவாகும். மற்ற சமூகங்களிடமும் சமயத்தவரிடமும் எவ்வித வேற்றுமை உணர்ச்சியும் காட்டாத நேர்மையாளர். உண்மையில் அவரை ஒரு தேசீயச் செல்வமென்றே கூற வேண்டும். அவரை செனட்சபைக்கு மீண்டும் நியமித்து அச்சபையின் தலைவராக அவரைத் தெரிவுசெய்வது அச்சபைக்கு மட்டுமின்றி நாட்டின் நன்மைக்கே உகந்ததாகஇருக்கும். இது வரை மிகத்திருப்திகரமாகத் தமது பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றியுள்ள இந்த அரசியல் ஞானியை மீண்டும் அப்பதவிக்குத்தெரிவு செய்யவேண்டுமென்பதே நாட்டில் பெரும்பாலானவர்களின் விருப்பமாகவுமிருக்கும்.

இச்சமயத்தில்மகாத்மா காந்தி நூற்றாண்டு ஜயந்தி விழாக்குழுத் தலைவராக இருந்து திரு. இரத்திஞயகா அவ்விழாவை வெற்றிகரமாகவும், மேலாகவும் நடத்திவைத்ததைப் போற்றாமலிருக்க முடியாது. அவ்விழா மிகச்சிறப்பாக நடந்ததற்கு அவரது அரசியல் ஞானமும் காந்தியடிகள் பால் அவருக்குள்ள அன்பும் பக்தியுமே காரணமென்றால் மிகையாது. அப்பேற்பட்ட பொது ஜன ஊழியரை நாட்டிலே ஓர் உயர்ந்த பதவியை வகிக்கும்படி எல்லாச் சமூகத்தவரும் சமயத்தவரும் எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் பிரதிநிதிகள் மூலம் நிறைவேற்றிவைப்பார்களென நம்புவோம்.




## நாமகளைத் துதிப்போம்

உயர்வொளிரும் கலையருள்வாள்
உணர்வெழுநல் வறிவருள்வாள்
நயம்மிளிரும் கவியருள்வாள்
நாவினிலே வீற்றிருப்பாள்
துயரகலத் துணைபுரிவாள்
சூக்குமமாய்த் துலங்கிடுவாள்
தயவிருக்கும் நெஞ்சினிலே
சரஸ்வதியாள் தங்குவளே!

பாவலர்கள் பாட்டினிலே
பாரதியாள் பரந்திருப்பாள்
நாவலர்கள் நல்லுரையில்
நாமகளும் நடமிடுவாள்
பூவினிலே யுயர்மலரில்
பொலிந்திடுவாள் புகழ்தருவாள்
தேவியவள் திருநோக்கால்
தேசுடனே வாழ்ந்திடலாம்.

— அரியாலையூர் வே. ஐயாத்துரை

★

வருவாய் வருவாய் கலைவாணி!
வந்தருள் புரிவாய் கலைவாணி!
அருவாய் உருவாய் அமைந்தாய் நீ
ஆய்கலை அனைத்தும் அறிந்தாய் நீ.

தருவாய் அறிவைக் கலைவாணி!
தாளிணை பணிவோம் கலைவாணி!
உருவாய் வந்தெம் உளத்திருந்து
உவந்தருள் புரிவாய் கலைவாணி!

— முருகசூரியன்

★

விதம்பல கலைகள் செல்வ
விந்தைகள் விஞ்ஞானத்தின்
புதுமைகள் அயலார் நாட்டில்
புத்துணர் ஆட்டி நல்ல

இதந்தரு மலையில் இன்ப
இல்லற வாழ்வும் ஈந்தாய்
விதந்தனைப் பெற்றே நாமும்
வியப்புறச் செய்வாய் நன்றே.

— அல்வை கோ தர்மகுலசிங்கம்

குள்ள அன்பர்கள் தாராளமாக உதவிசெய்ய முன்வந்து அக்குழந்தைகளின் கஷ்டங்களைத் தீர்ப்பரென்றே நம்புகிறேன். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தம் பிள்ளை தானே வளரும்.

0 0 0

ஜீவசேவையே சிவபூசை என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். சுவாமிவிவேகானந்தர் கூறுவதைக கேளுங்கள்:-

ஏழைகளுக்கும், பாமர மக்களுக்கும், தாழ்ந்தவர்களுக்கும் எவன் இரங்குகின்றானோ, அவனே உயிர்வாழ்கின்றான்! ஆகவே உங்கள் இதயத்தின் கடைசி துடிப்பு வரையும் இதை உணர்ந்து கடைப்பிடியுங்கள்.

ஆண்டவனைத்தேடி எங்கே போகின்றீர்கள். துன்பப்பட்டவர்கள், ஏழைகள், பல

பொலிஸ் அதிபர் திரு எம். பீ டெடிகம கூறினார்

முல்லைத்தீவு பட்டினசபை வாசலில் வைத்து பட்டின சபைத்தலைவர் திரு வஸ்தியாம்பிள்ளை அவரை வரவேற்றார்.

முல்லைத்தீவுப் பொலிசாரின் அணிவகுப்பைப் பார்வையிட்ட உதவிப் பொலிஸ் அதிபரிடம், பட்டின சபைத் தலைவரும், மற்றும் கிராமசபைத் தலைவர்களும், மகஜர்களைச் சமர்ப்பித்தனர்

சென்ற சில தினங்களுககு முன், பொலிசாருக்கும், பொது மக்களுக்குமிடையே ஏற்பட்ட வேற்றுமைகள் பற்றிதாம் அனுதாபப்படுவதாக திரு டெடிகம நமது நிருபர்க்களித்த பேட்டியின் போது கூறினார்.


இதோ! புதிய

# பொலித்தியோன் ஈ.சி. 100%

(பெனிட்ரேதயோன் 100%)

BAYER


இந்தப் பெயரை மறவாதீர்கள்!
எந்தப் பயிருக்கும் ஏற்ற பாதுகாப்பு இதுவே!

நெல்லைப் பாதிக்கும் நெற் சந்துக்குத்தி, தத்துக்கிளி, கொப்புள ஈ, நெல் ஈ, பனிப்பூச்சி, ஐங்கோண மூட்டுப் பூச்சி, இலையரிப்புழுக்களையும்,

அன்னாசியைப் பாதிக்கும் மீலிபக்ஸ் புழுவையும் புகையிலை, காய்கறி, வெங்காயம், பருத்தியைப் பாதிக்கும் எல்லாப் பூச்சி புழுக்களையும் அழிக்க வல்லது பொலித்தியோன்.

பொலித்தியோன் ஈ.சி. 100% அதி வன்மை வாய்ந்தது. மிகவும் சிக்கனமானது.

2 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 4 அவு. பெனிட்ரேதயோன் 50%
4 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 8 " "
8 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 16 " "




பொலித்தியோன் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பணலாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் பீடை நாசினிகள்.

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P. 9142


இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலவ்ரோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org